வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 35 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

06 ஐ.நா. மனித உரிமை சபையில் சிறிலங்காவின் எதிர்காலம்!


09 முதற்கோணல் முற்றுங்கோணல்! இடைக்காலம் இடர்காலமா?


10 'வலிசுமந்த' சகமனிதரை ஏமாற்ற வருகின்றனரா?


11 தமிழரசு கட்சியின் தலைவராக சிறிதரனும் தமிழர் அரசியலும்

# தமிழரசையும் இணைத்துக்கொண்டு பொதுச் சின்னத்தில் பயணிப்போம்!

## வீட்டுச் சின்னம்கூட மாற்றப்பட்டால் அதற்கு தயார் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

மன்னார், பெப்ரவரி 04

**தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் மேற்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம் என ரெலோ தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

5 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஓரணியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். பொதுச் சின்னமான குத்துவிளக்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஏற்கனவே நாங்கள் தமிழரசுக் கட்சியின் தனிச் சின்னத்தில் பயணித்தோம். பல வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பயணித்தோம்.



உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட வேண்டும் என்று அவர்கள் வெளியில் சென்றதன் காரணமாக நாங்கள் ஒன்றாக நிற்கவேண்டும் என்ற காரணத்தினால் நாங்கள்

15



## சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்க தாய்லாந்து பிரதமர் கொழும்புக்கு

கொழும்பு, பெப். 04

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

76 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று அவர் வருகை தந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த தாய்லாந்து பிரதமர் உள்ளிட்ட குழுவினரை பிரதமர் தினேஸ் குணவர்த்தன வரவேற்றார்.

தாய்லாந்து பிரதமர், தாய்லாந்து துணை பிரதமர் உள்ளிட்ட 39 பேர் கொண்ட குழுவொன்றே நாட்டை வந்தடைந்துள்ளது.

15

## 76ஆவது சுதந்திர தினம் இன்று காலிமுகத்திடலில்!

கொழும்பு, பெப். 04

76 ஆவது சுதந்திர தின விழாவை இன்று காலிமுகத்திடலில் நடத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

'புதிய நாட்டை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாண்டு சுதந்திர தின கொண்டாட்ட பிரதம விருந்தினராக தாய்லாந்து பிரதமர்

15

## ரணிலுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ராஜபக்ஷ தரப்பினர்

கொழும்பு, பெப். 04

"முன் அறிவிப்புகள் ஏதுமின்றி செயல்பட்டமைக்கு கடும் எதிர்ப்பை வெளியிடுகிறோம்." என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கவலை வெளியிட்டனர்.

அரசியலமைப்பின் பிரகாரம் இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். இதனால், தேர்தலுக்கான பணிகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்கள் மற்றும் பரந்தப் பட்ட கூட்டணியை அமைக்கும் முயற்சியில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள்

15

## கெஹலிய ரம்புக்வெலவுக்கு 15ஆம் திகதி வரை மறியல்

கொழும்பு, பெப். 04

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை எதிர்வரும் 15 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இந்தத் தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர்

15

## சாந்தன் இலங்கை வர அனுமதிக்குக!

## சிறீதரன், மனோ கூட்டாக கோரிக்கை சாதகமாக பரிசீலிப்பதாக ரணில் உறுதி

கொழும்பு, பெப். 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று நண்பகல் நேரில் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர், ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை பெற்றுள்ள சாந்தனை இலங்கை வர அனுமதிக்குமாறு கோரினர்.

இக்கோரிக்கையை சாதகமாக பரிசீலித்து, சாந்தன் இலங்கை வந்து தன் வயதான தாயாரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்புக்கான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரட்னாயக்கவுக்கு, சந்திப்பின் போதே ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

15

## இலங்கைக்கான அடுத்த தவணை நிதியை சர்வதேச நாணய நிதியம் மீளப்பெறக்கூடும்?

கொழும்பு, பெப். 04

தனியார் கடன் வழங்குநர்களுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுக்களை நடத்தி, அரசாங்கம் நல்ல நம்பிக்கையைக் காட்டத் தவறினால், சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் அடுத்த தவணை நிதியைத் திரும்பப் பெறக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனா உட்பட இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் அரசாங்கம் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தி வரும் அதேவேளையில், தனியார் கடன் வழங்குநர்களுடன் இதேபோன்ற கலந்துரையாடல்கள் நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இலங்கைக்கான தனியார் கடன் வழங்குபவர்களின் அளவு மிகவும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியம் அல்லது சீனாவின் பணத்தை மட்டும் இலங்கை நம்பியிருக்க முடியாது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, அடுத்த மீளாய்வுக்கு முன்னதாக, பத்திரதாரர்கள் மற்றும் சீன அபிவிருத்தி வங்கி உட்பட அதன் வர்த்தகக் கடன் வழங்குநர்களுடன் இலங்கை ஓர்

15

## இப்படியும் நடக்கிறது

அகில இலங்கைத் தமிழ் அரசு கட்சிக்கு தலைவர் தெரிவு வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருந்த பரபரப்பைவிட தெற்கில் அதிகம் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை இப்போது நடக்கின்ற சம்பவங்கள் ஒவ்வொன்றும் உணர்த்துகின்றன.

இது குறித்து அண்மையில் தேசிய சமாதானப் பேரவையின் ஜெகான் பெரேரா எழுதிய கட்டுரை பற்றி இந்தப் பத்தியில் எழுதியபோதும் சில விடயங்களை விவரித்திருந்தோம்.

இன்று காலை கொழும்பிலிருந்து தொலைபேசியில் தொடர்புகொண்ட ஒருவர் தெரிவித்த சில விடயங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை பல தடவைகள் இந்தப் பத்தியில் நாம் எழுதிய அதே வேளை, பல்வேறு அரசியல் விமர்சகர்களும் கூட அதனையே எழுதி வருகின்றனர். இதனால் தமிழ் மக்களின் வாக்குகளுக்கு குறிவைக்கும் தெற்கு அரசியல்வாதிகள் தமிழ் அரசின் தலைமைப் பதவிக்கு வரப்போகின்றவர் யார் என்பதை அறிய ஆவலுடன் இருந்திருக்கின்றனர். அந்தத் தலைமைத்துவப் போட்டியில் இருந்த தமிழ் அரசின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான சுமந்திரன், நீண்டகாலமாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசாவின் அரசியல் - சட்ட ஆலோசகர் போல செயற்பட்டு வருகின்றமை ஒன்றும் இரகசியமானது அல்ல. அதனால் அவர் தமிழ் அரசின் தலைவராக சுமந்திரன் வருவதை விரும்பியிருப்பார் என்பதும் ஒன்றும் ஆராய்ச்சி செய்து விடை கண்டுபிடிக்கப்பட வேண்டிய விவகாரம் அல்லத்தான்.

ஆனால் அவர் தலைவர் பதவிக்கான தேர்தலில் தோல்வியடைந்தபோது தமது எதிர்பார்ப்பு பொய்த்துப்போய்விட்டதாக கவலை அடைந்திருந்தவர்கள், பின்னர் பொதுச்செயலாளர் பதவிக்கு சுமந்திரனுக்கு வேண்டியவர் தெரிவாகிவிட்டார் என செய்தி வெளியானதும், "சுமந்திரன் கட்டுப்பாட்டில் கட்சி வந்துவிட்டது" என்று செய்திகளைப் பரப்பி திருப்திப்பட்டுக்கொண்டனர்.

தமிழ் அரசில் இப்போது அந்த விவகாரமும் இழுபறியில் இருப்பதும், அடுத்து என்ன நடக்கும் என்பது தெரியாமல் இருப்பதும் சஜித் தரப்பிற்கு சற்று பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றதாம்.

இந்த நிலையில்தான் புதிதாக ஒருவர் சஜித் தரப்பை அணுகி, புதிய தலைவர் சிறிதரனின் பிரதிநிதியாக பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் என்பதுதான் தெற்கில் இன்று பரவலாக பேசப்படுகின்ற செய்தியாகியிருக்கின்றது. கொழும்பிலிருந்து தொலைபேசியில் தொடர்புகொண்டு, இந்த விபரங்களைக் கூறிய அந்த நண்பர், குறித்த அந்த நபர் யார் என்பது பற்றி விபரம் அறிய முயன்றது அவரது பேச்சில் புரிந்தது.

ஏற்கனவே புலம்பெயர் தமிழ் பெரும்வர்த்தகர் ஒருவர், ரணிலின் வெற்றிக்காக பல்வேறு காய்நகர்த்தல்களை செய்துவரும் அதேவேளையில், இப்போது மற்றுமொரு தமிழ் வர்த்தகர் சஜித்தின் வெற்றிக்காக - தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தருவதற்காக உதவ முன்வந்திருக்கிறாராம். எப்போதும் முதலில் எழுதிய அந்த வர்த்தகர் என்ன செய்தாலும் அவருடன் போட்டிபோட்டு அதேவேலையைச் செய்யும் இந்தப் புலம்பெயர் தமிழ் வர்த்தகர், தமிழ் அரசின் புதிய தலைவரின் பிரதிநிதி தானே என்றும், அவரை தலைவராக்கியதே தான்தான் என்றும் கூட அவர் சிறிதரனின் வெற்றிக்கு உரிமை கோரியதாகவும், சிறிதரன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்கு உதவுவதாகவும் பேசியிருக்கிறாராம்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தருவதாகக் கூறிக்கொண்டு மக்கள் மத்தியில் அரசியல் செய்யும் கட்சிகளும், தலைவர்களும் பின்னர் தெற்கில் அரசுகளையும் அதன் தலைவர்களையும் - அவர்களின் தேவைக்கு ஏற்ப உதவுவது பற்றித்தான் அறிந்திருக்கின்றோம்.

இப்போது தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்கு உதவுகின்றோம் என்று இப்போது சிலர் புறப்பட்டிருக்கின்றனர். அவர்கள் எவருக்கும் தமிழ் மக்கள் மீது ஏதேனும் அக்கறை இருக்குமோ தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்று நீங்கள் நம்பினால், அவர்களின் பிரசாரத்திற்கு வேண்டுமானால் உங்கள் நிதியை கொடுங்கள். அதற்கு பிரதிபலனாக உங்கள் தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ளுங்கள். அதற்காக தமிழ் மக்களின் வாக்குகளை உங்கள் மூலதனமாக்காதீர்கள் என்று எழுதாமல் இருக்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# வடக்கு-கிழக்கில் வசிக்கும் 51 பேருக்கு பிரஜாவுரிமை

### வவுனியாவில் நேற்று நிகழ்வு

வவுனியா, பெப். 04

வடக்கு-கிழக்கின் 7 மாவட்டங்களில் வசிக்கும் 51 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை பெறுவதற்கான சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து வந்த நிலையில் அங்கு பிறந்த பிள்ளைகளுடன் யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் நாடு திரும்பிய பலர் இலங்கை பிரஜாவுரிமையைப் பெற முடியாது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நடமாடும் வேலைத் திட்டமாக துரிதமாக பிறப்பு சான்றிதழை வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய வடக்கு - கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த 51 பேருக்கு பிரஜாவுரிமை மற்றும் பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ள நிலையில் அதன் ஒரு கட்டமாக இலங்கை பிரஜை என குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கையொப்பமிடும் நிகழ்வு இடம்பெற்றது.



இதில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், குடிவரவு குடியகல்வு திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர், குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், ஒப்பர் சிலோன் அமைப்பின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# மக்களை துன்புறுத்தும் அதிகாரங்களை அரசாங்கத்திற்கு வழங்கும் சட்டங்கள்!

### அவற்றை விலக்கிக்கொள்ள வேண்டும் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, பெப். 04

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமும் ,ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தி அரசாங்கத்தை விமர்சிக்கின்ற எதிர்ப்பு தெரிவிக்கின்ற மக்களை துன்புறுத்துவதற்கான அதிகாரங்களை இந்த சட்டமூலங்கள் அரசாங்கத்திற்கு வழங்குகின்றன என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பாராளுமன்றத்தினால் காணப்படுகின்ற இரண்டு சட்டங்கள் குறித்து நாட்டில் பெரும் கரிசனைகள் காணப்படுகின்றன.

முதலாவது நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் மற்றையது பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில் சபாநாயகர் கையெழுத்திட்டுள்ளார் என நான் நினைக்கின்றேன்.

இந்த சட்டமூலங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளதால் கலந்துரையாடப்பட்டுள்ளதால் போராட்டங்கள் வீதிகளில் இடம்பெற்றுள்ளதால் இந்த சட்டங்கள் குறித்து நான் தெளிவுபடுத்தப் போவதில்லை.

ஒரு சிரேஸ்ட பிரஜை என்ற அடிப்படையில் எனது கருத்து என்னவென்றால் இரண்டும் மிகவும் பாரதூரமானவை ஆபத்தானவை.

இவை மிகவும் ஆபத்தான விதத்தில் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றன.

இந்த சட்டங்கள் ஜனநாயக வழியில் செயற்படும் மக்களை துன்புறுத்துவதற்கான தேவைக்கு அதிகமான அதிகாரங்களை அரசாங்கத்திற்கு வழங்குகின்றன. ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தி அரசாங்கத்தை விமர்சிக்கின்ற எதிர்ப்பு தெரிவிக்கின்ற மக்களை துன்புறுத்துவதற்கான அதிகாரங்களை இந்த சட்டமூலங்கள் அரசாங்கத்திற்கு வழங்குகின்றன.

இந்த சட்டங்களை விலக்கிக் கொள்ளுங்கள் என அரசாங்கத்திற்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.-என்றார். (அ)

# பொருளாதார பிரச்சனைக்கு தீர்வு காணக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே!

### ஐ.தே.க. உபதலைவர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 04

நாட்டில் அரசியல் பிரச்னை இருந்தால் அதற்கு தீர்வு காண பல தலைவர்கள் இருக்கின்றனர். ஆனால் தற்போது பொருளாதார பிரச்னையே இருக்கிறது. அதற்கு தீர்வுகாண ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அநுராதபும் மாவட்ட சம்மேளனம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அநுராதபுரம் இளைஞர் சேவை மன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது பொருளாதார பிரச்னையே இருந்து வருகிறது. அதற்கு தீர்வுகாண முடியாமல் போனதாலே நாடு வீழ்ச்சியடைந்தது. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப யாரும் முன்வராத நிலையில் ரணில் விக்கிரமசிங்க முன்வந்து தற்போது நாட்டின் பொருளாதாரத்தை படிப்படியாக ஸ்திர நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதனால் தற்போது நாட்டை பொறுப்பெற்க பலரும் முன் வருகிறார்கள்.

ஆனால் நாட்டில் அரசியல் பிரச்னை இல்லை. பொருளாதார பிரச்னையே இருக்கிறது. அரசியல் பிரச்னைக்கு தீர்வு காண இன்று பல தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காண முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமாகும். அதனால் பொருளாதார பிரச்னைக்கு தீர்வு கண்டபின்னர் அரசியல் பிரச்னைக்கு தீர்வு காண மற்றவர்கள் முன்வர முடியும்.

மேலும், ஐக்கிய தேசிய கட்சி எப்போதும் ஒரு கொள்கையிலேயே இருந்து வருகிறது. ஓர் ஆசனத்துக்கு செல்லும் வரை வீழ்ச்சியடைந்த போதும் கொள்கையில் உறுதியாக இருந்தோம். நாடு எதிர்கொண்டுவந்த பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காண சர்வதேச நாணயத்தின் உதவியை பெறுவதே ஒரே வழி என ரணில் அன்று தெரிவித்தபோது, பலரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். நாடு இல்லாமல்போகும் என தெரிவித்தனர். ஆனால் இறுதியில் பொருளாதார பிரச்னைக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்துக்கு அனைவரும் வந்தனர்.-என்றார். (அ)

ஈழநாடு



# சுகாதாரத்துறையில் மோசடி புரிந்த குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்

## கூறுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, பெப். 04

**சுகாதாரத்துறையில் இடம்பெற்றுள்ள மோசடிகள் தொடர்பில் தமது அரசாங்கத்தின் கீழ் பக்கசார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அம்பலாங்கொடை - படபொல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் சுகாதாரத்துறையில் பாரியளவிலான மோசடிகள் இடம்பெறுகின்றன.

தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு சாதாரண பொது மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

அவ்வாறான இறக்குமதிகளுக்கு தலைமை வகித்த அமைச்சர்கள் இன்றும் அமைச்சரவையில் அங்கம் வகிப்பதையிட்டு அரசாங்கம் வெட்கமடைய வேண்டும்.

இந்தநிலையில், சுகாதாரதுறையில் இடம்பெற்றுள்ள மோசடிகள் தொடர்பில், தமது அரசாங்கம் பக்கசார்பற்ற விசாரணைகளை நடத்தி, குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் - என்றார். (அ)

# இயந்திரத்தில் சிக்கித துண்டாடப்பட்ட பெண்ணின் கை மீள இணைக்கப்பட்டது!

கொழும்பு, பெப். 04

35 வயதான பெண்ணொருவரின் துண்டிக்கப்பட்ட கை, கண்டி தேசிய வைத்தியசாலையில் வெற்றிகரமாக இணைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் வலது கை. தென்னை நார் அரைக்கும் இயந்திரத்தில் சிக்கிய, தோள்மூட்டுக்கு கீழ் 4 அங்குலத்தில் துண்டிக்கப்பட்டி ருந்தது.

இந்த பெண் தென்னை நார் அரைக்கும் இயந்திரத்தை சுத்தம் செய்து கொண்டிருந்த போது, இயந்திரத்தை யாரோ இயக்கியதால் திடீரென வேலை செய்ய ஆரம்பித்தது. அந்தப் பெண்ணின் வலது கை முழங்கைக்கு மேல் உள்ள பகுதி இயந்திரத்தில் சிக்கி, துண்டாடப்பட்டது.

அந்தப் பெண்ணும், துண்டிக்கப்பட்ட கையும் உடனடியாக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவருக்கு அடிப்படை சிகிச்சைகள் வழங்கிய பின்னர் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு வைத்தியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அத்துடன், துண்டிக்கப்பட்ட கையும் ஐஸ் பெட்டியில் வைக்கப்பட்டு, கொண்டு செல்லப்பட்டது.

கண்டி தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணரான டொக்டர் அமில சசங்க ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ் டாக்டர் உதய கிரிதேன, எலும்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்கள் சதீர பிரேமரத்ன, உதர ரத்நாயக்க, மயக்க மருந்து நிபுணர் உடுவெல, டாக்டர் கசுன் மற்றும் சேனக ஆகியோர் இந்த சத்திர சிகிச்சையில் கலந்துகொண்டனர்.

ஷ்யாமா நாணயக்கார, சித்தாரா சுரவீர, சந்திமா செனவிரத்ன, திலினி அபேவர்தன, எரண்டி மதுஷானி மற்றும் சசானி கோஸ்டா உள் ளிட்ட தாதியர் குழுவும் இந்த அறுவை சிகிச்சைக்கு ஆதரவளித்துள்ளனர்.

அநுராதபுரம் வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் இணைந்து வித்தில் துண்டிக்கப்பட்ட கையை ஐஸ் கட்டிகளுக்குள் வைத்து, பாதுகாப்பாக வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததன் காரணமாகவே சத்திரசிகிச்சையில் ஈடுபட்ட வைத்தியர்களால் கையை வெற்றிகரமாக மாற்றியுள்ளதாக சத்திரசிகிச்சையில் ஈடுபட்ட வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளி கண்டி தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும், இதுவரை அவருக்கு எந்தவிதமான பாதிப்புகளும் காணப்படவில்லை எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# ஆயுர்வேத கூட்டுத்தாபனத்துக்கு 195 மில்லியன் ரூபாய் இலாபம்!

கொழும்பு, பெப். 04

ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் 2023ஆம் ஆண்டில் 195 மில்லியன் ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

குறித்த இலாபமானது 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிடைத்த அதிகூடிய இலாபமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தின் புதிய நிர்வாகத்தினூடாக இந்த இலாபத்தை ஈட்ட முடிந்ததாகவும் சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

அத்துடன், 76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பத்து இலட்சம் மூலிகைச் செடிகளை நடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டம் நேற்று முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி கூறினார். (அ)

# விபத்தில் 12 வயது சிறுவன் பலி

அம்பாறை, பெப். 04

சம்மாந்துறை - அம்பாறை பிரதான வீதியில் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் சம்மாந்துறை பிரயோக விஞ்ஞான பீடத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தில் 12 வயதுடைய சிறுவன் பலியாகியுள்ளார்.ஏ.எம்.பாஸீர் எனும் 12 வயது சிறுவன் ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

பல்கலைக்கழக பீடத்தின் பக்கத்திலிருந்து வீதியை கடந்து, மறு பக்கத்தில் உள்ள தமது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த குறித்த சிறுவனை, சம்மாந்துறை பகுதியில் இருந்து அம்பாறை நோக்கி வந்த ஹன்டர் ரக வாகனம் மோதியலில் சம்பள இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.உயிரிழந்த சிறுவனின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தாக்கப்பட்டு ஒருவர் கொலை!

கொழும்பு, பெப். 04

மத்துகம பகுதியில் நேற்று அதிகாலை நபர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மத்துகம ஓவிட்டிகல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சந்தியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவிகள்





வடமராட்சி,பெப். 04

யாழ்ப்பாணம் வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரமத்தால் கருவி மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் கட்டட நிர்மாணத்திற்காக 230,000 ரூபா பெறுமதியான 100 சிமெந்து பைக்கெற்களை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் நேரடியாக கொண்டு சென்று வழங்கினார்.

இதேவேளை ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெள்ளிக்கிழமை வாராந்த நிகழ்வாக ஆசிரியர் சிவஞானம் பாலமுரளியின் கந்தன் மகிமை ஆன்மீக அருளுரை காலை 10.40 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது.

மேலும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள தொண்டைமானாறு தெற்கு ஜே/ 383 கிராமசேவையாளர் பிரிவில் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு நாற்றுக்கள், விதைப் பைக்கெற்றுக்கள் வழங்குவதற்காக ரூபா 20,000 நிதியும் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது.

இதே வேளை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் வெளொயீடான ஞானச்சுடர் 313 ஆவது மலர் வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை அன்று ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிமள் தலைமையில் இடம் பெற்றுள்ளது. வெளியீட்டுரையினை இளைப்பாறிய வலிகாமம் பிரதிக்கல்விப்பணிப்பாளர் - சு.தேவமனோகரன் அவர்களும், மதிப்பீட்டுரையினை - இளைப்பாறிய அதிபர் ஆ.சிவநாதன் அவர்களும், ஆற்றியதை தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கிவைக்கப்பட்டதுடன் யாழ் மாவட்டத்தில் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு ரூபா 300000 பெறுமதியில் மாதாந்தம் வழங்கப்படும் உலர் உணவு உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வுகளில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகன் சுவாமிகள், சைவ கலை இலக்கிய பேரவை நிர்வாகிகள், ஆச்சிரம தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# சிறுவர்களின் போஷாக்கை மேம்படுத்த விசேட கவனம்

கொழும்பு, பெப். 04

மக்களின் வறுமையைப் போக்கி சிறுவர்களின் போஷாக்கை மேம்படுத்துவதில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களின் போஷாக்கை மேம்படுத்தும் நோக்கில் விவசாய மற்றும் பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சு, கல்வி அமைச்சு, உலக உணவு வேலைத்திட்டம், உணவு மேம்பாட்டுச் சபை, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் மன்றம் உள்ளிட்ட தரப்புக்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளின் இரத்த சோகை, நினைவாற்றல் குறைப்பாடு மற்றும் வளர்ச்சி குறைப்பாடு உள்ளிட்ட நோய்களுக்கான தீர்வாக இந்த திட்டம் அமைந்திருக்கும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 5 இலட்சம் மாணவர்களுக்கு அடுத்த 08 மாதங்களில் ஊட்டச்சத்து நிறைந்த மதிய உணவு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கையூட்டு பெற முயன்ற இரு பொலிஸார் கைது

கொழும்பு, பெப். 04

10,000 ரூபாவை கையூட்டாக பெற முயன்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கையூட்டு மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவினால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹாவெல பொலிஸில் கடமையாற்றும் இரண்டு பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து, போக்குவரத்து வழக்கான அபராதத் தொகையை குறைப்பதற்காக மஹாவெல பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து, பணத்தை பெற்றுக்கொள்ள முற்பட்ட போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

ஈழநாடு



# பஸிலின் வருகைக்காக காத்திருக்கும் மொட்டு!

## ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பது குறித்து தீர்மானிக்க

கொழும்பு, பெப். 04

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி நிலைப்பாட்டை மக்கள் கேட்கின்றனர், எனவே, அது தொடர்பில் விரைவில் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை எடுக்குமாறு பொதுஜன பெரமுனவின் தலைமைப்பீடத்திடம் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

ஐக்கிய மக்கள் சக்தி தமது கட்சி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை பெயரிட்டுள்ளது, தேசிய மக்கள் சக்தி அநுர குமார திஸாநாயக்கவை களமிறக்கவுள்ளது.

எனினும், தமது கட்சி வேட்பாளரை நிறுத்துமா அல்லது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குமா என்பது தொடர்பில் மொட்டு கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் குழப்பம் நிலவுகின்றது. இது நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்பவுள்ளார், அவர் நாடு திரும்பிய பின்னர் விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளார். அந்தக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி தேர்தல் குறித்த மொட்டு கட்சியின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்படவுள்ளது. (அ)

# இணையவழி பாதுகாப்புச் சட்டத்தால் பாதிப்பு ஏற்பட்டால் இலவச சட்ட உதவி

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, பெப். 04

இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தினால் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுமாயின் ஐக்கிய மக்கள் சக்தி இலவச சட்ட உதவிகளை வழங்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

கம்புறுபிட்டிய மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

இணையவழி பாதுகாப்பு எனும் பெயரில் மக்களின் ஜனநாயக உரிமையை இல்லாதொழித்தமையினால், சமூக ஊடகங்கள் மூலம் நாட்டுக்கு தகவல்களை வெளியிட மக்கள் அஞ்சுவதாகவும், உண்மை தகவல்களை நாட்டுக்கு வெளியிடபயப்பட வேண்டாம் என அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், உண்மையான தகவல்களை நாட்டுக்கு வெளிக்கொணர்வதன் மூலம், அரசாங்கத்தின் மிலேச்சத்தனம் பிரயோகிக்கப்பட்டு கைது நடவடிக்கைகள் இடம்பெற்றால், பாதிக்கப்படும் சகல மக்களுக்கும் இலவச சட்ட ஆதரவை வழங்கி ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார். (அ)

# கரையோர ரயில் சேவைகளில் மாற்றம்!

கொழும்பு, பெப். 04

கரையோர மார்க்கத்தில் இயங்கும் ரயில் சேவைகள் இன்று சில பிரதான ரயில் நிலையங்களில் இடைநிறுத்தப்படமாட்டாது என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் 76 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு இன்று கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பிரமுகர்களின் பங்குபற்றுதலுடன் வெகுவிமரிசையாக நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் ஜனாதிபதி உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதால், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி கொள்ளுப்பிட்டி மற்றும் பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களில் அதிகாலை 05.00 மணி முதல் காலை 09.00 மணிவரை ரயில்கள் நிற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யானை, மொட்டு, கை, சேவல் குதிரை, வீணை ஓரணியில்?

## புதிய கூட்டணிக்கான பேச்சு ஆரம்பம்

கொழும்பு, பெப். 04

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி என்பன இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான பேச்சுகளை நேற்று முன் தினம் ஆரம்பித்துள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்கான முன்னோட்ட கூட்டமொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற இச்சந்திப்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய கூட்டணிக்கான ஆரம்பக்கட்ட பேச்சுகள் நடைபெற்றுள்ளதுடன், அடுத்துவரும் நாட்களில் கட்சிகளை தனித்தனியே சந்தித்து பேச்சு நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர் மொட்டு கட்சியுடன் ஜனாதிபதி சந்திப்பை நடத்துவார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள ஜனாதிபதி, அதற்காக ஆதரவளிக்குமாறு தோழமைக் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் (குதிரை சின்னம்), செந்தில் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (சேவல் சின்னம்), டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி (வீணை சின்னம்) என்பனவும் கூட்டணியில் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# யாழ்.நகரில் வீடு உடைத்து 13 பவுண் திருடியவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 04

யாழ்ப்பாணம் நகரில் நேற்று முன் தினம் இரவு வீட்டில் ஆட்கள் இல்லாத நேரம் 23 லட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் இரண்டு லட்சம் ரூபா பணம் களவாடப்பட்டமை சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதனையடுத்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார். திருடப்பட்ட நகை மற்றும் பணம் என்பன அவரிடம் இருந்து மீட்கப்பட்டன.

யாழ்ப்பாண பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜருள் வழிகாட்டுதலில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி இந்திக்க தலைமையிலான அணியினர் குறித்த திருட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்துள்ளதோடு அவரிடமிருந்து திருடப்பட்ட 23 லட்சம் ரூபா பெறுமதியான 13 பவுண் நகையினையும் 2 லட்சம் ரூபாய் பணத்தினையும் மீட்டுள்ளனர்.

கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு குறித்த நபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.(அ-3)

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

# எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவு!

கொழும்பு, பெப். 04

அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகருக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக நீதிபதிகள் குழாம், விசாரணை நிறைவில் அறிவித்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, ஏ. எச். எம். டி. நவாஸ், ஷிரான் குணரத்ன, அர்ஜூன அபேசேகர ஆகிய ஐவர் அடங்கிய நீதியசர்கள் குழு முன்னிலையில் ஆறு நாட்கள் மனுக்கள் தொடர்பிலான விசாரணை நடைபெற்றது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் சில சரத்துகள் அரசமைப்புக்கு முரணானது என தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் 31 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான கண் பரிசோதனை இலக்கத்தகடு மாற்றம்

கொழும்பு, பெப். 04

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவ பரிசோதனையின் போது கண் பரிசோதனைக்காக தற்போது பயன்படுத்தப்படும் இலக்கத் தகடுகளை மாற்றுவதற்கு தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தி இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், ஆனால் உள்நாட்டில் எழுத்துகள் மற்றும் இலக்கங்கள் மாற்றப்படுவதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் தர்ஷன் அபேரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் சில அதிகாரிகளின் உதவியுடன் பார்வையற்றவர்கள் இலக்கங்களை மனப்பாடம் செய்து சோதனைகளில் தேர்ச்சி பெறுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் சம்பவங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார்.

பார்வையற்றோருக்கு மருத்துவ பரிசோதனை செய்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட இரு அதிகாரிகளின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் 8 பேருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த தலைவர், அது காட்சிப்படுத்தப்பட்டு அதற்கேற்ப சோதனைகள் நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் நுகேகொடை மற்றும் வெரஹெர ஆகிய கிளைகளில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய இருபத்திநான்கு மாவட்ட அலுவலகங்களிலும் இதே வேலைத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
04.02.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவுக்கான நன்றிக்கடன்

இலங்கையின் முன்னேற்றத்திற்கு இந்தியா தொடர்ந்து உதவவேண்டும் அத்துடன் இந்தியாவுக்கு, இலங்கை எப்போதும் நன்றிக்கடனாக இருக்கும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார். இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுடனான சந்திப்பின் போதே, சந்திரிகா இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கை, வரலாற்றில் என்றுமில்லாதவாறான பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோது, இந்தியா உற்ற நண்பனாக நடந்து கொண்டது. அண்மையிலும் இந்த விடயங்கள் தொடர்பில், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் பேசியிருந்தார். இந்தியா உடனடியாகவே, நாலரை பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது. இந்தியா அந்த வேளையில் உதவாது இருந்திருந்தால், நாடு மோசமான நிலைக்குள் சென்றிருக்கும்.

இந்தியா எப்போதும் அதன் அயல்நாடுகளின் நலன்களில் அக்கறையுடன் செயல்பட்டு வந்திருக்கின்றது – வருகின்றது. குறிப்பாக இலங்கையின் முன்னேற்றத்தில் இந்தியா எப்போதும் முதல்தர பங்காளியாக இருந்திருக்கின்றது. அதேவேளை, இலங்கையின் உள்ளக அரசியல் ஸ்திரத்தன்மையுடன் இருக்கவேண்டும் என்பதிலும் அக்கறையுடன் இருந்திருக்கின்றது. அந்த அடிப்படையில்தான், ஈழத் தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பிலும் தொடர்ந்தும் கரிசனையுடன் இருக்கின்றது.

இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு கசப்பான அனுபவங்கள் உண்டு. எனினும் இந்தியா தொடர்ந்தும் ராஜதந்திர வழிமுறைகளில் விடயங்களை கையாள்வதில் அக்கறையுடன் செயல்பட்டுவருகின்றது. தமிழ் மக்களின் விடயங்களில் அரசாங்கம் போதிய முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை. ஆனால், இந்தியா ஒரு நட்புநாட்டுக்கான எல்லைக்குள் நின்றவாறு, விடயங்களை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

ஈழத் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில், இந்தியாவின் கடந்தகால தலையீடுகள், இந்தியாவின் நலன்களை நேரடியாக பாதித்திருந்தன. ஏனெனில், தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் கரிசனையுடன் இருப்பதை, சிங்கள கடும்போக்காளர்கள் தொடர்ந்தும் ஆட்சேபித்துவருகின்றனர். இருந்தும், இந்தியா தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் அதன் ஈடுபாட்டிலிருந்து பின்வாங்கவில்லை. ஒருபோதும் பின்வாங்காது. உண்மையில் சிங்களவர்களை விடவும் ஈழத் தமிழர்களே இந்தியாவுக்கான விசுவாசத்தை காண்பிக்க வேண்டும். ஏனெனில் அந்தளவிற்கு தமிழ் மக்களுக்கான வரலாற்று தலையீடுகளை, இந்தியா செய்திருக்கின்றது. இப்போதும் தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான அரசியல் உரிமைகள் உண்டு என்பதை வலியுறுத்திவரும் ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான்.

இலங்கையை பொறுத்தவரையில் அனைத்து மக்களின் நலன்களையும் கருத்தில்கொண்டு இந்தியா செயல்பட்டிருக்கின்றது – இப்போதும் செயல்பட்டுவருகின்றது. இலங்கையின் மக்கள் அனைவரும் இந்தியாவுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கை காலத்திற்கு காலம் கடைப்பிடித்த அணுகுமுறைகள் இந்தியாவுக்கு உகந்ததாக இருந்ததில்லை.

ஈழத் தமிழர்களை பொறுத்தவரையில், ஒரு பகுதியினர் இப்போதும், இந்தியாவின் மீது குற்றச்சாட்டும் மனோபாவத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோர் மத்தியிலிருந்தும், அவர்களுடன் தொடர்புள்ள புலம்பெயர் குழுக்கள் மத்தியிலும் இந்திய எதிர்ப்பு கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இது அடிப்படையிலேயே இந்தியாவை புரிந்துகொள்ள விரும்பாமையின் வெளிப்பாடாகும்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்திலிருந்து பயணிக்கும் விடயத்தில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்திவருகின்றது. அந்த விடயத்தில் எப்போதும் தமிழ் மக்களுடன் நிற்குமென்றும் கூறிவருகின்றது. இந்த உறுதி மொழியை வேறு எந்த நாட்டினால் வழங்க முடியும்? இந்த விடயத்தை புரிந்துகொண்டு, செயல்பட வேண்டியது, தமிழ் உரிமைவாத கட்சிகளின் பொறுப்பாகும்.

# வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ள வடக்கு மாகாண அரச சாரதிகள்!

யாழ்ப்பாணம், பெப். 04

வடக்கு மாகாண அரச சாரதிகளுக்கு உரிய முறையில் இடமாற்றம் வழங்கப்படவேண்டும். இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக சாரதிகள் சங்கத்தின் செயலாளர் சுதர்ஷன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வடமாகாணத்தின் ஆளுநர் பி.எஸ் .எம் சாள்ஸ் கடந்த காலத்தில் ஆளுநராக இருக்கும் பொழுது இடமாற்றம் இடம்பெற வேண்டும் என ஆர்வமாக இருந்தபொழுதிலும் தற்பொழுது ஆளுநராலேயே இது இடைநிறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது அனைவரும் கூடி தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல தீர்மானத்துள்ளோம்.

கடந்த ஜனவரி மாதமே தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல முற்பட்ட பொழுது உயர்தர பரீட்சையினை கருத்திற்கொண்டு தை மாதம் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை .

கடந்த மாதமே நாம் பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் 10 திகதி வரை தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட தீர்மானித்தோம். இருப்பினும் கடந்த மாதமே வடமாகாணத்திற்குட்பட்ட திணைக்களங்கள் ,அமைச்சுக்களுக்கு நாம் கடிதம் அனுப்பியும் தீர்மானம் எடுக்கப்படவில்லை .

ஆளுநரிடம் சென்றபொழுது அவர் எம்மை சந்திக்கவில்லை. ஆளுநரின் செயலாளர் பிரதம செயலாளரை சந்திக்க சொன்னார். பிரதம செயலாளரை சென்று சந்தித்தபொழுது எமக்கு நோயாளர் காவு வண்டி ஓடுவதற்கு தெரியவில்லை என தெரிவித்தார்.

இருந்தாலும் நாம் அனைவரும் 10 வருடமாக சேவையில் உள்ளோம். உடனடியாக எமக்கான பயிற்ச்சியினை இரு மாத காலத்திற்கு வழங்கி உத்தரவாத கடித்ததுடன் இடமாற்றம் வேண்டும் என கோரியிருந்தோம். அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மேலும் கடந்த 2018 ஆம் ஆண்டில் இருந்து இடமாற்றம் இடைநிறுத்தபடுகின்றது. மத்திய அமைச்சர்களால் இது இடைநிறுத்தப்படுகின்றது.

மத்திய சுகாதார அமைச்சு எடுக்கின்ற தீர்மானம் தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இருக்கின்ற சாரதிகளுக்கோ அல்லது தொழிற்சங்கத்திற்கோ எதுவித அறிவிப்புக்களும் வழங்கப்படவில்லை.

ஆகவே எமது இடமாற்றத்தை வலியுறுத்தி எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி காலை ஆளுநர் செயலகத்திற்கு பேரணியாக சென்று மகஜரை கையளித்து தொடர்ந்து பிரதம செயலாளருக்கும் மகஜரை கையளிக்க உள்ளோம்.

மாறாக எமக்கான நோயாளர் காவு வண்டி சாரதி பயிற்சி உத்தரவாத காலத்துடன் இடமாற்றம் கடிதமும் வழங்கப்படுமாயின் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து விலகுவோம் - என்றார்.(அ)

# தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வருகின்றார் சனத் நிஷாந்தவின் மனைவி?

கொழும்பு, பெப். 04

விபத்தில் உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி சமரி பெரேராவை, தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வருமாறு பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்கு மொட்டு கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் ஒருவர் தயார் நிலையில் இருக்கின்றார் எனவும் தெரிய வருகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியும் , புத்தளம் மாவட்ட மக்களும் கோரிக்கை விடுத்தால் அரசியலுக்கு வருவது



தொடர்பில் பரிசீலிக்கலாம் என சமரி பெரேரா அண்மையில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதவியை துறந்த லொஹான் ரத்வத்தை


கொழும்பு, பெப். 04

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்த தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக வர்த்தமானி அறிவிப்பு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இவர் கடந்த 29ஆம் திகதி பதவியை ஏற்ற நிலையில் அன்றைய தினமே தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# ஐ.நா. மனித உரிமை சபையில் சிறிலங்காவின் எதிர்காலம்!

ச. வி. கிருபாகரன்
பிரான்ஸ்

தற்போதைய ஐ.நா மனித உரிமைகள் சபையில் - ம.உ.ச. மார்ச் 2006 முதல் செயல்பட்டு வருகிறது. 1946 முதல் செயல்பட்ட ஐ.நா மனித உரிமைகள் ஆணைகுழு- தற்பொழுது ம. உ. ச.யாக இயங்குகிறது. அதன் 18 வது அமர்விற்கு, 2024 ஆம் ஆண்டிற்கான மொராக்கோவின் ஐ.நா ஜெனிவா பிரதிநிதி, திரு ஓமர் ஸினிபர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வழக்கம் போல் இந்த ஆண்டும் ம. உ. ச. மூன்று வழக்கமான அமர்வுகள் கொண்டுள்ளது:

(1) 55வது அமர்வு - 26 பெப்ரவரி 2024 முதல் 05 ஏப்ரல் 2024 வரை

(2) 56வது அமர்வு -18 ஜூன் 2024 முதல் 12 ஜூலை 2024 வரை

(3) 57வது அமர்வு -09 செப்ரெம்பர் 2024 முதல் 09 ஒக்ரோபர் 2024 வரை.

ம. உ. ச.யின் 2024க்கான நாற்பத்தேழு உறுப்பு நாடுகளும், பிராந்திய அடிப்படையில் அவர்களது அங்கத்துவ காலம் முடிவடைவதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆப்பிரிக்க நாடுகள் (13) - அல்ஜீரியா (2025), பெனின் (2024), புருண்டி (2026), கேமரூன் (2024), கோட் டி வார் (2026), எரித்திரியா (2024), காம்பியா (2024), கானா (2026), மலாவி (2026), மொராக்கோ (2025), சோமாலியா (2024), தென்னாப்பிரிக்கா (2025), சூடான் (2025).

ஆசியா-பசிபிக் நாடுகள் (13) - பங்களாதேஷ் (2025), சீனா (2026), இந்தியா (2024), இந்தோனேசியா (2026), ஜப்பான் (2026), கஜகஸ்தான் (2024), குவைத் (2026), கிர்கிஸ்தான் (2025), மலேசியா ( 2024), மாலத்தீவு (2025), கத்தார் (2024), ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (2024), வியட்நாம் (2025).

லத்தீன் அமெரிக்க கரீபியன் நாடுகள் (8) - அர்ஜென்டினா (2024), பிரேசில் (2026),சிலி (2025), கோஸ்டாரிகா (2025), கியூபா (2026), டொமினிகன் குடியரசு (2026), ஹோண்டுராஸ் (2024), பராகுவே (2024).

மேற்கு ஐரோப்பா மற்றும் பிற பிராந்தியங்கள் (7) - பெல்ஜியம் (2025), பின்லாந்து (2024), பிரான்ஸ் (2026), ஜெர்மனி (2025), லக்சம்பர்க் (2024), நெதர்லாந்து (2026), அமெரிக்கா (2024).

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் (6) - அல்பேனியா (2026), பல்கேரியா (2026), ஜோர்ஜியா (2025), லிதுவேனியா (2024), மண்டினீக்ரோ (2024), ருமே னியா (2025)

சிறிலங்காவிற்கு 2024ம் ஆண்டு, உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் முக்கியமான சர்ச்சைகள் கூடிய வருடமாக இருக்கும் என்பதனால், சிறிலங்காவின் எதிர்காலம் ம. உ. ச. என்னவாக இருக்கும் என்பதை ஆராய வேண்டியுள்ளது.

ம. உ. ச.யின் 12 அக்டோபர் 12 2022 அன்று கடைசித் தீர்மானத்திற்கு அமைய, உதாரணத்திற்கு 2, 7, 19க்கான செயல்பாட்டு பத்திகள் பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றன:


ஓமர் ஸினிபர்

2. “மற்றும் அலுவலகத்தால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும், மற்றும் சிறப்பு நடைமுறைகளால் செய்யப்பட்ட பரிந்துரைகளுக்கு உரிய பரிசீலனையை வழங்கவும் சிறிலங்காக்கு அழைப்பு விடுக்கிறது” (சுருக்கம்)

7. “சுயாதீனமான, பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான உள்நாட்டு வழிமுறைகளின் தொடர்ச்சியான பற்றாக்குறையைக் குறிப்பிடுகிறது, மேலும் மனித உரிமைகளின் கடுமையான மீறல்களுக்கான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது”. (சுருக்கம்)

(07ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 04.02.2024 - 10.02.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - தை 21
நல்ல நேரம்: 9.35 - 11.05
ராகு காலம் : 05.05 - 06.35 திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

கணவன், மனைவி இடையே அன்பும் பாச மும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத் தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்கள் மேற்கொள்வது முன்னேற்றத்தைத் தரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

அன்னையின் அன் பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். உறவுகளுடன் சென்று மகான் களைத் தரிசனம் செய்து மகிழ்வீர்கள். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டு வாடகை வசூல் திருப்தி கரமாக இருக்கும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். அரசுப்பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவால் பதவிஉயர்வு கிடைக்கலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமைவதோடு, புத்திர பாக்கியம் ஏற்படலாம். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். தொலை தூரப்பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் செல்வாக்கு மிக்க நபர்களின் உதவியால் உங்கள் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத் தில் நல்ல புகழும், கௌரவமும் உண்டாகும். எடுத்துக் கொண்ட புதிய திட்டங்களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம். இடைவிடாத கடின உழைப் பின் காரணமாக நேரத்துக்கு உணவு அருந்த முடியாத நிலை ஏற்படலாம். சிலருக்குப் பயணங் களில் எதிர்பாராத பிரச்சனைகள் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்பப் போதுமான ஊதியம் இருக்காது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். சிலருக்குப் புதுவாகன யோகம் ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். கவனம் தேவை. கற்பனை வளம் பெருகும். பிற்கால நலன்கருதி சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பணவரவுகள் ஆகியவை ஏற்படும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மிக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனைவி, புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாய் இருக்கும். புதுப்புது முயற்சிகளில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். அரசு ஆதரவு, அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கும் அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம். அன்புக்கு இனியவர்களால் உங்கள் கண்ணீர் துளிகள் துடைக்கப்படலாம். சோம்பல் அகற்றி சுறுசுறுப்பாய் இருப்பதும் நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும் சொந்த பந்தங்களிடையே ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் நன்றாக நடந்து இலாபம் பொங்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். சிலருக்கு திடீர்ப் பயணங்கள் மூலமாக ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவீர்கள். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய்ப் பெருக்கமும் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களோடு அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்களைத் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் சம்பாதிக்கும் திறன் மேம்படும். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். சிறப்பான ஆடை அணிந்து மிடுக்காக உலாவருவீர்கள். சுகமான சுற்றுலாப் பயணங்களால் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. சாகசங்களைப் புரிவீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலமாக பண வருவாய் அதிகரிக்கும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர்பதவிகள் கிடைக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். முயற்சிகள் வெற்றிபெறும்.

# சிறிலங்காவை என்ன விலை கொடுத்தும் சர்வதேச பிடியிலிருந்து காப்பாற்ற புலம்பெயர் தமிழர்கள் சிலர் முயல்கின்றனர்!

19. "நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலில் முன்னேற்றம் உட்பட சிறிலங்காவின் மனித உரிமை நிலைமையை கண்காணித்து, அறிக்கையிடுவதை மேம்படுத்துமாறு ஐ.நா.மனித உரிமை ஆணையாளரை ஐக் கோருகிறது. ஆவ் அறிக்கையை 57வது அமர்வில் உரையாடலின் பின்னணியில் விவாதிக்கப்பட வேண்டும். (சுருக்கம்).

ஓர் அவதானிப்பாளராக உள்ள யாரும், சிறிலங்கா இவற்றில் ஏதாவது ஒன்றை நடைமுறை படுத்தியிருக்கிறார்களா என்றால் பதில் என்ன?

**57வது அமர்வில் தீர்மானம்**

இதனால் ஐ.நா.மனித உரிமை ஆணையாளரிள் அலுவலகம் , ஐ.நா. சிறப்பு பிரதிநிதிகள், சிறிலங்காவிற்கான இணை குழு அங்கத்தவர்களான - கனடா, மலாவி, மொண்டெனேக்ரோ, வடக்கு மாசிடோனியா, பிரித்தானியா, அமெரிக்கா ஆகியவையும், பல சர்வதேச நிறுவனங்கள், முக்கிய முதியவர்கள் அமைப்பு மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் போன்றேர், 57வது அமர்வில் சிறிலங்கா தொடர்பாக கடுமையான கண்டனத்துடன், சிறிலங்கா மீதான ஓர் தீர்மானம் கொண்டுவருவதற்கு ஆவலாகவுள்ளனர்.

இவற்றை யார் செய்ய முனைந்தாலும் அனைத்தும், ம. உ. ச.யின் கைகளில் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ம. உ. ச.யில் இரண்டு வேறுபட்ட கருத்து கொண்ட குழுக்கள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஒன்று மனித உரிமை சார்பு என்றும், மற்றொன்று மனித உரிமை மீறல்களை ஆதரிப்பவர்களா காணப்படுகிறது. உதாரணமாக - சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகள் மனித உரிமை மீறல்களை ஆதரிப்பவர்களா காணப் படுகிறது.

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகியவை மனித உரிமைகளுக்கு ஆதரவானவை என்றும் கூறப்படுகிறது. ஐ.நா மனித உரிமை மன்றங்களுடனான எனது மூன்று தசாப்த கால அனுபவத்தில் இதை ஏற்க மாட்டேன். காரணம், "நீ என் முதுகில் சொறிந்து விடு, நான் உன் முதுகை சொறிவேன்" - என்று ஒரு பழமொழி - தத்துவத்தை இருப்பதை நாம் இங்கு மறந்துவிடக் கூடாது. இன்று காஸாவிலும் யேமனிலும் நடப்பது இவற்றிற்கு நல்ல உதாரணம்.

சிறிலங்காவில் தற்போது நிலவும் பொருளாதார அரசியல் நெருக்கடியில், அவர்கள் இத் தத்துவத்தை பின்பற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது. தேர்ந்தெடுக்கப்படாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மேற்கு நோக்கி அல்ல,அமெரிக்காவை நோக்கி பயணிக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே.

**அமெரிக்கத் தூதுவர்**

மக்கள் விடுதலை முன்னணி - ஜே.வி.பி.யின் செல்வாக்கு அதிகரித்து வருவதால், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங், ஜனாதிபதி ரணிலுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்து, இருவரையும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வெற்றிகொள் விடாது தூண்டிவிடுவதை நாம் காணுகிறோம். இதன் பெறுபேறுகள், சரியான திசையில் செயல்படுமா அல்லது காலி முகத்திடலில் இன்னுமொரு மக்கள் போராட்டத்திற்கு வித்திடுமா என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

உண்மையில் சஜித் பிரேமதாசவும், ரணிலும் இரு சந்தர்ப்பவாதிகள். சஜித் 



தனது தந்தை பிரேமதாசாவுடன் விடுதலைப் புலிகள் நடத்திய பேச்சுக்களின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் புகைப்படம் எடுக்க மிகவும் ஆர்வமாக இருந்ததை சஜித் மறந்திருக்க மாட்டார். அப்போது அவர் இந்தியப் படைகளுக்கு எதிராக போராடிய விடுதலைப் புலிகளின் துணிச்சலை பாராட்டினார். பின்னர் விடுதலைப் புலிகளை விமர்சித்தார் (படம்). ரணிலும் இதே போன்று சந்தர்ப்பவாதியாக செயற்பட்டார் செயல்பாடுகிறர்.

எது என்னவானாலும், அரசியலில் எதுவும் அனைத்தும் சாத்தியம் என்பதை ஜூலி சுங் கருத்தில் கொள்ள வேண்டும். ஜேவிபி சஜித்துடனும், அரச குடும்பமாக காட்சியளிக்கும் ராஜபக்சக்களுடன் இணையாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ம. உ. ச.யின் 57வது அமர்வில், ரணிலுக்காக அமெரிக்கா சிறிலங்காவை பாதுகாக்கப் போகிறது என்றால், ம.உ.சபை நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை சிறிலங்கவுக்கு ஆதரவாக ம. உ. ச.யின் செயற்பட்ட அமெரிக்காவிற்கு எதிரான நாடுகளான - சீனா, ரஷ்யா, கியூபா, ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலை என்ன? அப்படியாகின், சிறிலங்காவின் நலனுக்காக, அமெரிக்கா இந்த நாடுகளுடன் ம. உ. ச.யில் ஒத்துழைக்கப் போகிறதா?.

போரின் போது சிறிலங்கா இந்தியாவையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றியது. சர்வதேச சமூகத்திற்கும் இந்தியாவிற்கும், மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகளில் ஏதாவது ஒன்று, கடந்த பதினான்கு வருடங்களில் நிறைவேற்றப்பட்டடுள்ளதா?

**தமிழ் அரசியல்வாதிகள்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச சமூகத்திற்கு புதியவர் அல்ல. 2015 முதல் 2019 வரை அவர் பிரதமராக இருந்தபோது, தமிழ்த் தேசிய கூட்டமைபை சாமர்த்தியமாக கையாண்டு, அவர்களின் உதவியுடன் தனது காலத்தை வெற்றிகரமாக முடித்தார். முட்டாள்தனமான தமிழ் அரசியல்வாதிகளால், வடக்கு, கிழக்கு மக்கள் மீண்டும் சிங்கள பௌத்த அரசினால் ஏமாற்றப்பட்டனர்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திற்கு, ரணில் தந்திரமாக இணை அனுசரணை வழங்கினார். இறுதியில் சிறிலங்காவின் தீர்மானத்திற்கான இணை அனுசரணை, என்ன ஆனது? இவர் இன்று ஜனாதிபதியானதும், தனது நேர்காணல்களில் மேற்கத்திய அரசாங்களை விமர்சிப்பதுடன், ஜெர்மனி பிரித்தானியா ஆகிய நாடுகளில் ஏதேனும் சர்வதேச விசாரணை நடந்ததா? ஏன கேள்வி கேட்கிறார். அங்கு ஏன், எதற்காக? சர்வதேச சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்?

அமெரிக்கா ம. உ. ச.யில் "இசை நாற்காலி" விளையாடுகிறது. குடியரசுக் கட்சியினர் ஜனதிபதியானதும், ம.உ.ச.யிலிருந்து விலகுவதும், ஜனநாயகக் கட்சியினர் ஜனதிபதியானதும் மீண்டும் ம.உ.ச.யி இணைவதே இவர்களது சரித்திரம்.

2012 ஆண்டு முதல், ம.உ.ச.க்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர். அவர்களில் சிலர் கபடமான நிகழ்ச்சி நிரலுடன் வேலை செய்கிறார்கள். வேறு

இனப்பிரச்சினைக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்த பல புலம்பெயர் தமிழ் உறுப்பினர்கள் நிலைமையை தற்போது அவதானித்து கொண்டிருக்கின்றனர். இவ் சந்தர்ப்பத்தில் 'பெயருக்கும் புகழிற்கும்' அர்ப்ப தனமாக ஆசை கொண்டு, கனடாவிலும் பிரித்தானியாவிலும் வாழும் சில புலம்பெயர் தமிழ் உறுப்பினர்கள், சிறிலங்காவை என்ன விலை கொடுத்தும் சர்வதேச பிடியிலிருந்து காப்பாற்ற கங்கணம் கட்டியுள்ளனர்.

சிலர் தாம் தான் தமிழ் மக்களின் பிரதிநிகள் போல் பாசங்கு பண்ணுகிறார்கள். கபடமான நிகழ்ச்சி நிரலைக் கொண்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களை மூளைச் சலவை செய்து - ஐ.நா. வளாகத்திற்குள் நுழைவதற்கு நிரந்தர அடையாள அட்டை, பக்க நிகழ்வில் பேசுவது, சபையில் இரண்டு நிமிடம் அரைகுறை ஆங்கிலத்தில் உப்பு சொப்பற்ற உரை போன்றவை தான் முக்கியமான மனித உரிமை செயற்படென பயிற்சி கொடுத்துள்ளார்கள். இவற்றை எந்த ராஜதந்திரி, எந்த நாடு கவனத்தில் கொள்ளும்?

முன்னர் கூறியது போல், ம.உ.ச.யில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்திற்கு - மனித உரிமை ஆணையாளர் காரியலாயம், சிறிலங்காவிற்கான இணைகுழு நாடுகள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், முக்கிய புள்ளிகளின் முதியவர்கள் அமைப்பும், சர்வதேச ஆர்வலர்களுமே காரணம் என்பதே யாதார்த்தம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஸ்தாபிக்கப்பட்ட அதே காலப்பகுதியில், விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது பற்றி சில விடயங்களை இங்கு கூற விரும்புகிறேன். ஆரம்ப காலத்தில், இந்தியா சிறிலங்காவுக்கு ஆதரவாக இருந்த காரணத்தினால், ம.உ.ச.யில் சிறிலங்கா தொடர்பான எந்தவொரு விடயத்தையும் முன்னெடுப்பது மிக மிக கடினமான பணியாக காணப்பட்டது. அப்படியாக இருந்த பொழுதிலும் நாங்கள் எம்மால் முடிந்தளவு எமது செயற்பாடுகளை தக்க வைத்துக் கொண்டோம். ஆனால் 2009 மே முதல், பல விடயங்கள் சர்வதேச ரீதியாக படிப்படியாக மாற்றம் பெற்றுள்ளது.

**சிறிலங்காவின் சர்வதேச பரப்புரை**

முன்பு, சிறிலங்கா தமது சர்வதேச பரப்புரைகளை எவ்வாறு முன்னெடுத்துள்ளது என்பதை இங்கு சுருக்கமாக தருகிறேன்.

அன்றைய சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தாம் எப்படியாக விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை நிறைவேற்றினர்கள் என்பதை, 4 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2012 ஆம் ஆண்டு ஊடகங்களிற்கு கூறியதை இங்கு பார்கலாம்.

"......25 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள ஏழு நாடுகள் விடுதலைப் புலிகளின் தடைக்கு உடன்படவில்லை. இதனால் தடையை ஒருமித்த முடிவாக ஏற்றுக்கொள்வது கடினமாகிவிட்டது. எனவே, நான் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டலீசா ரைஸை பலமுறை சந்தித்து, 29 மே 2006 அன்று விடுதலைப் புலிகளை தடை செய்ய அந்த ஏழு நாடுகளின் சம்மதத்தைப் பெற்றேன்...." (சுருக்கம்)

இதேவேளை, சிறிலங்கா போர் நிறுத்த கண்காணிப்புப் பணியகத்தின் தலைவரான மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்ரிக்சன் கூறியதாவது, "இக்கட்டான நேரத்தில் பிரஸ்ஸல்ஸ் உணவகத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவிற்கு, பிரித்தானியா, அமெரிக்கா அரசாங்கங்களிடமிருந்து பாரிய அழுத்தங்கள் இருந்தன என்றார். (ஆதாரம் - ஐரோப்பிய பாராளுமன்றம், பி-009345-2012, 15.10.2012)

ரணிலின் அண்மைய வெளிநாட்டுப் பயணம் மற்றும் புலம்பெயர் தமிழர்களைச் சந்திப்புக்கள், இவர் மீண்டும் வடக்கு, கிழக்கு மக்கள் மீது சவாரி செய்யத் தயாராகியுள்ளார் என்பது புலப்படுகிறது. இனப்பிரச்சினைக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்த பல புலம்பெயர் தமிழ் உறுப்பினர்கள் நிலைமையை தற்போது அவதானித்து கொண்டிருக்கின்றனர். இவ் சந்தர்ப்பத்தில் 'பெயருக்கும் புகழிற்கும்' அர்ப்பதனமாக ஆசை கொண்டு, கனடாவிலும் பிரித்தானியாவிலும் வாழும் சில புலம்பெயர் தமிழ் உறுப்பினர்கள், சிறிலங்காவை என்ன விலை கொடுத்தும் சர்வதேச பிடியிலிருந்து காப்பாற்ற கங்கணம் கட்டியுள்ளனர். இவர்கள் முன்பும், ரணில் பிரமராக இருந்த கால பகுதியான 2015-2019லும் இதையே செய்தார்கள். இவற்றிற்கு சிறிலங்காவில் போராட்ட காலத்தில் அரசியலில் பங்கு கொள்ளாத, தற்போதைய அரசியல்வாதியும் வழங்கறிஞாருமான ஒருவரின் மறைமுக பங்களிப்பு உள்ளதாக நம்பப் படுகிறது. (முற்றும்)

# மீண்டும் பேச்சு மேசைக்கு வந்துள்ள 'எட்கா' முடங்குமா? முன்னேறுமா?

கந்தையா அருந்தவபாலன்

'எட்கா' தொடர்பான பொருளாதார எதிர்வுகூறல்கள் எவ்வாறு இருப்பினும் அது தொடர்பாக அடுத்து இந்தியாவில் நடைபெறவுள்ள 13ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் அல்லது மிக அண்மிய எதிர்காலத்தில் இவ்விரு நாடுகளும் ஓர் உடன்பாட்டை எட்டுமா என்பதை எதிர்வு கூறுவது கடினமாக உள்ளது. ஏனெனில் இதற்கேற்ற ஒரு சூழல நிலைமை இப்போது இலங்கையில் காணப்படவில்லை.

2016 ஆம் ஆண்டு முன்னைய ரணில் - மைத்திரி நல்லாட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையிலான ' பொருளாதார, தொழில்நுட்ப கூட்டு உடன்படிக்கை (Economic and Technical Cooperation Agreement- ETCA) தொடர்பான பேச்சுவார்த்தை 2018இல் கைவிடப்பட்டிருந்தது. அதாவது அப்போதைய பிரதமர் ரணிலின் முயற்சியில் ஜனாதிபதி மைத்திரிக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் கண்டுகொள்ளப்பட்ட இணக்கத்துக்கு அமைய அது தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் 2018இல் நல்லாட்சியில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை காரணமாக தடைப்பட்டதுடன் கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அது முற்றாகக் கைவிடப்பட்ட ஒன்றாகவே மாறியது. இவ்வுடன்படிக்கை தொடர்பாக 2016 -2018 க்கு இடைப்பட்ட காலத்தில் இருநாட்டுப் பிரதிநிதிகளாலும் பதினொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்நேரத்தில் இலங்கையில் இவ்வுடன்படிக்கைக்குச் சார்பான நிலைப்பாட்டைச் சில தரப்புகள் கொண்டிருந்தாலும் எதிரான நிலைப்பாடே மேலோங்கியிருந்தது. எதிர்க்கட்சிகளுக்கு அப்பால் பொருளியல் பேராசிரியர்கள், அரசு சார்பற்ற சமூகப் பொருளாதார அமைப்புகள் இதற்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுந்தியிருந்தன. இவற்றுள் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இதனை மிகக் கடுமையாக எதிர்த்ததுடன் இந்தியா தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கையைத் துஷ்பிரயோகம் செயவதாக அப்போதைய ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் முறையீடும் செய்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசியல் குழப்பங்களாலும் ஆட்சி மாற்றத்தினாலும் கிடப்பில் போயிருந்த இவ்வுடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீளவும் தொடங்குவதென, சென்ற ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா சென்றபோது அவருக்கும் மோடிக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது. அதற்கமைய சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 30 மற்றும் 1ஆம் திகதிகளில் 12ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை கொழும்பில் இடம்பெற்றது. இதில் இந்திய வர்த்தகத் திணைக்களத்தின் கூட்டுச்செயலர் ஆனந் ஸ்வருப் தலைமையிலான இந்தியப் பிரதி நிதிகளும் கே.ஜே. வீரசிங்க தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு பல விடயங்களை இறுதியாக்கியதுடன் மீதமுள்ள சில விடயங்களுக்கு அடுத்து இந்தியாவில் நடைபெறவுள்ள 13 ஆவது சுற்றுப்பேச்சில் தீர்வு காணப்பட்டு உடன்படிக்கை வரைபை முழுமையாக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகளின் பின் தூசு தட்டி மீண்டும் மேசையில் போடப்பட்டுள்ள இவ்வுடன்படிக்கை இலங்கையின் இன்றைய அரசியல் பொருளாதாரச் சூழலில் முற்றாகுமா அல்லது மீண்டும் முடங்கி விடுமா? என்ற கேள்வி எழுவது இயல்பானதே. ஏனெனில் முன்மொழியப்பட்ட காலத்திலேயே அதிக எதிர்ப்புக்கு முகங்கொடுத்த இத்திட்டம் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளாந்தம் வீதியில் இறங்கி நிற்கும் மக்களுக்கு இன்னொரு போராட்டத்துக்கான களத்தை உருவாக்கவும் ஏதுவாகலாம்.



நாடுகளுக்கிடையிலான இதுபோன்ற வர்த்தக, பொருளாதாரக் கூட்டுறவு தொடர்பான சிந்தனை உலகில் அண்மையில் தோன்றியதோ அன்றிப் புதியதோ அல்ல. அது சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தொடங்கி இன்று உலகின் பல நாடுகளால் வெற்றிகரமாக கையாளாப்பட்டுவரும் ஒரு பொருளாதார முறைமையாக மாறி வருகிறது. 1957ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பொதுச்சந்தை ஒன்றை உருவாக்கும் நோக்கில் ஆறு ஐரோப்பிய நாடுகளால் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம் படிப்படியாக வளர்ச்சியடைந்து 27 நாடுகளின் பொருளாதாரக் கூட்டுறவாக மாறியது மட்டுமன்றி அந்நாடுகளுக்கென பொது நாணயம், பொதுப் பாராளுமன்றம், பொது நீதிமன்றம் என்பவற்றைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியமாக மாறியுள்ளது. ஒரு சில புறநடைகள் காணப்படினும் இந்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அரசியல் எல்லைகள் வேறாக இருப்பினும் அவற்றின் பொருளாதார எல்லை ஒன்றாக உள்ளது. இத்தகைய கூட்டு பொருளாதார முறைமைக்கான மிகப்பிந்திய உதாரணமாக 2022 ஜனவரியில் 'ஆசியான்' உறுப்பு நாடுகள் வேறு சில முன்னேறிய நாடுகளுடன் சேர்ந்து உருவாக்கிய விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டு உடன்படிக்கையைக் குறிப்பிடலாம். புருனே, மியன்மார்,கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், வியடனாம், தாய்லாந்து ஆகிய பத்து ஆசியான் அமைப்பு நாடுகள் அவுஸ்ரேலியா,சீனா,ஜப்பான், தென்கொரியா, நியுசிலாந்து நாடுகளுடன் இணைந்து இந்தப் பொருளாதாரக் கூட்டுறவை ஏற்படுத்தியுள்ளன. இதே போன்ற முறைமைகள் வட அமெரிக்கா,தென்னமெரிக்கா, ஆபிரிக்கா போன்ற பிராந்தியங்களிலும் நடைமுறையிலிருந்து வருகின்றன. எனினும் இவை யாவும் ஒரே தன்மையானவை எனக்கூற முடியாது. குறைந்த பட்சம் சுங்கத்தீர்வையற்ற சுதந்திரமான வர்த்தகம் தொடங்கி உயர்ந்த பட்சம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரே பொருளாதார எல்லைக்கும் இடைப்பட்ட பல வேறு நிலைப்பட்ட பண்புகளைக் கொண்ட கூட்டுகளாகக் காணப்படுகின்றன. எந்தவொரு விடயத்திலும் நன்மைகளுடன் தீமைகளும் கலந்திருப்பது போல இவ்வாறான பொருளாதாரக் கூட்டுகளிலும் அவ்விரண்டும் கலந்துள்ளன.

தற்போது மீண்டும் பேச்சு மேசைக்கு வந்திருக்கும் 'எட்கா' உடன்படிக்கை பின்வரும் பிரதான குறிக்கோள்களை உள்ளடக்கியுள்ளது.

1. இரு நாடுகளுக்கிடையில் பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் என்பவற்றினை உறுதிப்படுத்தலும் விருத்தி செய்தலும்.

2. பொருட்கள் மற்றும் சேவைகள் வர்த்தகத்திலான கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

3.பொருளாதாரக் கூட்டுறவுக்கான விடயப் பரப்பெல்லையை விரிவுபடுத்துவதுடன் அதனை நிலைப்படுத்துவதற்கான பொறிமுறையையும் நிறுவுதல்.

சுருக்கமாகச் சொன்னால் இலங்கைக்குக்கும் இந்தியாவுக்கும் இடையில் பொருட்கள், சேவைகள், மூலதனம், தொழில்நுட்பம் போன்றன கட்டுப்பாடுகளின்றி அல்லது மிகக் குறைந்த நிபந்தனைகளுடன் அசைவதற்கான ஏற்பாடு இதன்மூலம் ஏற்படும் எனலாம். இதற்கமைய கட்டற்ற ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளுக்கு மேலாக இந்திய நிறுவனங்கள் சுதந்திரமாக இலங்கையில் தங்கள் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இந்திய வைத்தியர் அல்லது கணனிப்பொறியாளர் அல்லது வேறு வகையான தொழிலாளர்கள் இலங்கையில் சுதந்திரமாக பணியாற்ற முடியும். கூட்டு முயற்சிகள், தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் போன்றவற்றை இலகுவாக மேற்கொள்ள முடியும். இதேபோல இலங்கையும் இவ்வாறான செயற்பாடுகளை இந்தியாவில் மேற்கொள்ள முடியும்.

வெளிப்பார்வைக்கு இவை வரவேற்கக்கூடிய நல்ல விடயங்கள் போலத் தென்பட்டாலும் ஒப்பீட்டுரீதியில் இவ்வுடன்பாடு இலங்கைக்குப் பாதகமானது என துறைசார் நிபுணர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறான உடன்படிக்கைகளைச் செய்யும் இரு நாடுகளதும் பொருளாதார நிலை கிட்டத்தட்ட சமமாக இருக்கும் போது இரண்டு நாடுகளும் பரஸ்பர நன்மைமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். மாறாக ஏற்றத்தாழ்வு காணப்படுமாயின் தாழ்வாக உள்ள நாட்டுக்குப் பாதகமாகவும் உயர்வான நாட்டுக்குச் சாதகமாகவும் இது அமைந்துவிடும். இலங்கையுடன் ஒப்பிடுமிடத்து இந்தியப் பொருளாதாரம் இன்று பலமடங்கு உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. விவசாயம், கைத்தொழில், சேவைத்துறைகள் மிக வேகமாக வளரச்சியடைந்து வருவதுடன் அந்நாட்டின் ஏற்றுமதிக் கூறுகளும் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. இவ்வுடன்படிக்கை இல்லாத இன்றைய நிலையில்கூட இலங்கையிலிருந்தான இந்தியாவுக்கான ஏற்றுமதியைவிட அந்நாட்டிலிருந்தான இலங்கையின் இறக்குமதி ஐந்து மடங்கிற்கும் அதிகமாக உள்ளது. இலங்கையின் முதன்மை இறக்குமதி நாடாக இந்தியா இருக்கும் போது ஏற்றுமதியைப் பொறுத்து இந்தியா மூன்றாம் இடத்திலேயே உள்ளது. இவற்றைவிட முக்கியமான விடயம் ஒப்பீட்டுரீதியில் இலங்கையைவிட இந்தியாவில் குறைந்தளவு கூலிமட்டம் நிலவுவது. இன்று இந்தியாவில் பல்தேசிய நிறுவனங்களின் முதலீடுகள் குவிவதற்கான பிரதான காரணங்களில் ஒன்று அங்கு மலிவான ஊழியம் கிடைப்பதனாலாகும். மலிவான ஊழியம் பொருட்களின் உற்பத்திச் செலவைக்குறைத்து விலையைக் குறைப்பதால் கட்டுப்பாடற்ற நிலையில் இந்தியாவிலிருந்தான இலங்கையின் இறக்குமதி பன்மடங்கு அதிகரிக்கும். மறுபுறத்தில் இலங்கையின் உயர்ந்த கூலிமட்டம் அதன் உற்பத்திகளின் விலைகளை உயர்த்துவதால் இலங்கையிலிருந்தான இந்தியாவுக்கான ஏற்றுமதி குறைவடையும். இதானால் இவ்விரு நாடுகளுக்கிடயான வர்த்தக நிலுவையில் பாரிய இடைவெளியை ஏற்படுவதற்கான நிலைமை தோன்றும். அதேவேளை இலங்கையில் நிலவும் உயர்ந்த கூலிமட்டம் கட்டுப்பாடற்ற நிலையில் இந்தியாவிலிருந்தான ஊழியர்களின் இலங்கை வருகையைத் அதிகரிக்கச் செய்யும். இது இலங்கையரின் வேலைவாய்ப்புகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். இதனைக் கருத்திற்கொண்டே இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இவ்வுடன்படிக்கையைத் தீவிரமாக எதிர்க்கிறது. இதே போல இன்னும் பல விடயங்களில் இவ்விரு நாடுகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. எனினும் இவ்வழிகளில் இலங்கைக்கு பாதகமான நிலைமை தோன்றக் கூடுமாயினும் வேறுவழிகளில் அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிகளும் குறித்த உடன்பாட்டில் இருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

தமக்கிடையில் சுதந்திரமாக பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் இரண்டு நாடுகளுக்கும் ஏற்படக் கூடிய சாதக, பாதக நிலைமைகளை மதிப்பிடுவதற்கான பொருத்தமான ஒரு சுட்டியாக இருப்பது அந்நாடுகளுக்கிடையிலான மொத்த ஏற்றுமதி வருமானத்துக்கும் இறக்குமதிச் செலவுக்கும் இடையில் காணப்படும் மீதி அல்லது வித்தியாசம் ஆகும். இதைப் பொருளியல் எண்ணக்கருவில் 'வர்த்தக மீதி' என்று கூறப்படும். சுதந்திர வர்த்தக உடன்பாட்டின் பின் இந்த மீதி ஒரு நாட்டுக்குப் பாதகமாக அமையுமானால் அதாவது குறித்த நாட்டின் இறக்குமதிகள் பன்மடங்கு அதிகரித்து ஏற்றுமதிகள் எதிர்பார்த்த அதிகரிப்பைக் காட்டாவிடில் அந்நாட்டுக்கு அவ்வுடன்படிக்கை பாதகமாக அமையும் எனலாம். உதாரணமாக 2022 இல் இந்தியாவிலிருந்தான இலங்கையின் இறக்குமதி 4580 மில்லியன் அமெரிக்க டொலராகவும் அந்நாட்டுக்கான இலங்கையின் ஏற்றுமதி 855 மில்லியன் டொலராகவும் இருந்தமையினால் பற்றாக்குறை 4795 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். சுதந்திர உடன்பாட்டின் பின் இப்பற்றாக்குறையில் பெரிய மாற்றமேதுமின்றி இருந்தால் அவ்வுடன் படிக்கையினால் இலங்கைக்கு பாதகமில்லை எனலாம். மாறாகப் அப்பற்றாக்குறை வேகமாக அதிகரிக்குமானால் இலங்கைக்குப் பாதகமானது எனக்கருத முடியும்.

எனினும் 'எட்கா' உடன்படிக்கை தனியே சுதந்திரமான பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றன்று.(10ஆம் பக்கம் பார்க்க)

# முதற்கோணல் முற்றுங்கோணல்!
# இடைக்காலம் இடர்காலமா?

**பனங்காட்டான்**

தென்னிலங்கையில் அரசியல்வாதி ஒருவரை சந்திக்க நேரும்போது, நீங்கள் இப்போது எந்தக் கட்சி என்று கேட்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் அதற்கடுத்து நாடாளுமன்றத் தேர்தல் என்பதால் கட்சித் தாவல்கள் மந்திகள் வேகத்தில் முந்தி நடைபெறுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலிருந்து அதன் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீரவும், முன்னாள் எம்.பி. திலங்க சுமதிபாலவும் ராஜினாமா செய்துள்ளனர். சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் கண் வைத்து காய்களை நகர்த்துகிறார்.

மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுனவின் ஒரு குழுவினர் ரணிலுடன் சேர்வதற்காக பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெறுகிறது, அதற்கு முன்னர் எந்த அடிப்படையில் ரணிலுடன் இணைந்து அவரை ஜனாதிபதி தேர்தலில் ஆதரிக்கலாமென்ற மந்திராலோசனை மகிந்த தலைமையில் இடம்பெறுகிறது. பெரமுனவுக்குள் ஏற்படும் பிளவைத் தடுப்பதற்கு இந்த முயற்சி கைகொடுக்குமென முக்கியஸ்தர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த அமளிக்கிடையில் முன்னாள் ஜனாதிபதி கோதபாய ராஜபக்ச தம்மைப் பற்றிய ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். நாட்டு மக்களின் அமோக வாக்குகளால் (முன்னர் போல சிங்கள மக்களின் வாக்குகளால் என்று இங்கு குறிப்பிடாததை கவனிக்க வேண்டும்) ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட தாம், சிலரின் கோமாளித்தனமான செயற்பாடுகளால் தாமாகவே பதவியிலிருந்து விலகியதாக தெரிவித்துள்ளார்.

சிலரின் கோமாளித்தனமான செயற்பாடு என்று மொட்டையாக இவர் குறிப்பிட்டிருப்பது மொட்டுக் கட்சியின் தலைவர்களையா (ராஜபக்ஷ குடும்பம்) அல்லது தம்மால் உருவாக்கப்பட்ட வியத்கம அறிவுஜீவிகளையா என்பது புரியவில்லை.

அறகலய போராட்டத்தால் ஒளித்தொளித்து ஓடித் திரிந்தும், ஜனாதிபதி மாளிகைக்குள் அடைக்கலம் புகுந்து பதுங்கியிருந்த வேளை உயிராபாயம் என அறிய வந்தபோது பின்கதவு வழியாக தப்பியோடியதும், இறுதியில் வெளிநாடொன்றில் இருந்தவாறு ஜனாதிபதி பதவியைத் துறந்ததும் உலகப் பிரசித்தமான வரலாறு. இதனை மறந்துவிட்டு தாமாகவே பதவியிலிருந்து விலகியதாகக் கூறுவதை பச்சைப்பொய் என்று சொல்லாது வேறு எவ்வாறு சொல்ல முடியும்?

இதற்கும் மேலாகப்போய், மக்களின் ஆதரவு தமக்கு இன்னமும் இருப்பதாகவும், மீண்டும் அரசியலுக்கு வருவது பற்றி இதுவரை தீர்மானிக்கவில்லையென்றும் கோதபாய கூறியிருப்பதுதான் வேடிக்கையானது.

தேர்தல் காலம் நெருங்க நெருங்க இன்னும் பல விநோத விளையாட்டுகளை பார்க்கக்கூடியதாகவிருக்கும். எது நடைபெற்றாலும் எதிலுமே தாம் சம்பந்தப்பட்டதாகக் காட்டிக் கொள்ளாமல் அனைத்துத் தரப்பினரையும் சிதறடித்து சின்னாபின்னமாக்கும் தமது நிகழ்ச்சி நிரலை ரணில் விக்கிரமசிங்க மிகவும் சாமர்த்தியமாக இயக்கி வருகிறார்.

நடைபெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தல் தெற்கை இவ்வாறு வழிநடத்துகிறது என்றால், தமிழர் தேசத்தில் நடந்து முடிந்த ஒரு தேர்தல் விந்தையான பல அரசியல் நிகழ்வுகளுக்கு பாதை அமைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த வருட இறுதியில் எழுபத்தைந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடவிருக்கும் அகில இலங்கை தமிழரசுக் கட்சி முன்னர் எப்போதுமில்லாத பதவிப் போட்டிகளில் சிக்குப்பட்டுள்ளது. முன்னர் எப்போதுமே இதன் தலைவர் பதவிக்கு போட்டி இடம்பெற்றதில்லை. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங் கம், என்.ஆர்.ராஜவரோதயம், எஸ்.எம்.ராசமாணிக்கம், டாக்டர் இ.எம்.வி. நாகநாதன், அ.அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் போன்றோர் - இவர்களுள் சிலர் ஒரு தடவைக்கு மேல் போட்டியின்றி கட்சித் தலைவர் பதவிக்கு தெரிவாகி கட்சிக்கு மட்டுமன்றி அப்பதவிக்கும் பெருமை சேர்த்துக் கொடுத்தனர். ஆனால் இம்முறை மட்டுமே போட்டி இடம்பெற்றது.



ஆரம்பத்தில் மூவர் போட்டியிடுவதாக இருந்ததாயினும் மட்டக்களப்பு யோகேஸ்வரன் அதிலிருந்து விலகி தமது ஆதரவை சிறீதரனுக்கு வழங்கினார். முதல் இரண்டு வருடங்களை தமக்கு இடமளிக்குமாறு சிறீதரன் விடுத்த வேண்டுகோள் சுமந்திரனால் நிராகரிக்கப்பட்டதால் தலைவர் தெரிவு தேர்தலாக மாறியது. தமிழர் தாயகத்துக்கு வெளியே, முக்கியமாக இலங்கையின் தெற்கில் சிலரும் ஓரிரு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் சுதந்திரன் வெற்றியை எதிர்பார்த்திருந்தன. அது நிறைவேறாததால் ஏற்பட்ட மனத்தாங்கலை சில ஊடக அறிக்கைகள் மற்றும் கட்டுரைகள் வாயிலாக படிக்க முடிந்தது.

முதற்கோணல் முற்றிலுங்கோணல் என்ற முதுமொழியை நிரூபிப்பதுபோல அடுத்தகட்ட நடவடிக்கைகளும், செயலாளர் தெரிவும் கோணலாகிப் போயுள்ளது. இது தொடர்பாக வெளிவந்தவற்றுள் கட்சியின் புதிய தலைவராக இன்னமும் பதவியேற்காத சிறீதரனுக்கு சுமந்திரன் எழுதிய கடிதம் முக்கியமானது. தலைவர் தேர்தலின்போது யாப்புக்கு முரணான பல விடயங்கள் இடம்பெற்றன என்பதைத் தெரிந்தும், போட்டி முடிவை (தமது தோல்வியை) தாம் ஏற்றுக் கொண்டதாக சுமந்திரன் தெரிவித்திருப்பதை இங்கு முக்கியமாகப் பார்க்க வேண்டும் (இந்த வாதத்தையே சிறீதரனுக்கு எதிராக ஓர் ஆயுதமாக சுமந்திரன் பின்னொரு வேளையில் பாவிக்க மாட்டார் என்று கூறமுடியாது).

யாப்புக்கு முரணாக சிறீதரன் தலைவராகத் தெரிவானார் என்பதை தமது ஒப்பமிட்டு சுமந்திரன் சிறீதரனுக்கு மட்டும் அனுப்பவில்லை. அதனை பகிரங்கப்படுத்தியும் உள்ளார். செயலாளர் தெரிவின்போது அவ்வாறு இடம்பெற்றிருப்பின் தாம் செய்தது போன்று முன்னிலைப்படுத்தாது இரண்டையும் சமத்துவப்படுத்த வேண்டுமென்ற தொனி இக்கடிதத்தில் பிரகாசிக்கின்றது.

தலைவராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் அடுத்துவரும் கட்சியின் மாநாட்டிலேயே அப்பதவியை பொறுப்பேற்று தலைமைப் பேருரையை நிகழ்த்துவது வழக்கம். அந்த வகையில் செயலாளர் தெரிவு இடம்பெற்ற கூட்டத்துக்கு சிறீதரன் தலைமை தாங்கியிருக்க முடியாது. மாநாட்டுக்கு முன்னர் இடம்பெற்ற செயலாளர் தெரிவுக் கூட்டத்துக்கு மாவை சேனாதிராஜா தலைமை தாங்கியது தவறென்று இதுவரை சுமந்திரனைத் தவிர வேறெவரும் குறிப்பிடவில்லை என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பதவியை தமக்கு வழங்க சிறீதரன் முன் வந்ததாகவும் அதனைத் தான் நிராகரித்துவிட்டதாகவும் இதே கடிதத்தில் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டென உள் வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கட்சியின் செயலாளர் பதவியை பெற வேண்டுமென்ற விருப்பு சுமந்திரனுக்கு இருந்தது. அடுத்தது, ஏற்கனவே இப்பதவியை வகித்து வரும் சீ.வீ.கே.சிவஞானம் தலைவர் தெரிவில் தம்மை ஆதரித்து ஒப்பமிட்டதால் அவருக்கு எதிராக இப்பதவியை பெற சுமந்திரன் விரும்பவில்லையென்பது.

செயலாளர் தெரிவுக் கூட்டத்தில் முக்கியமாகப் பார்க்கப்பட்ட ஒரு விடயம் கட்சியின் பதில் செயலாளர் சுகயீனம் காரணமாக அதில் பங்குபற்றாதது. இந்த நிலையில் கட்சியின் துணைச் செயலாளர்களில் ஒருவர் என்ற வகையில் சுமந்திரன் அப்பணியை பொறுப்பேற்றார். "தலைவர் தெரிவிலே பிரிந்திருப்பதாகக் காணப்படும் இரு அணிகளும் ஒன்று சேர வேண்டும்" என்ற நோக்கம் தமக்கு இருந்ததாக தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் சுமந்திரன், அது ஆத்மசுத்தியானதாக இருந்திருப்பின் இரு அணிகளில் ஒன்றுக்கு தலைமை தாங்கியவர் என்ற வகையில் செயலாளர் தெரிவுக்கு தலைமை தாங்காது ஒதுங்கியிருக்க வேண்டும். சிறீதரன் தான் கேட்டிருந்தாலுங்கூட அந்தக் கோரிக்கையை அவர் நிராகரித்திருக்க வேண்டும். ஆனால் அப்படியன்றி செயலாளர் தெரிவுக்கு தலைமை தாங்கியது விருப்பம் கலந்த முரண் (Conflict of interest) என்ற நியமத்துக்குள்ளானது.

செயலாளர் தெரிவுக்கூட்டம் தொடர்பாக வெளிவந்துள்ள ஊடகத் தகவல்களின்படி சாணக்கியன், குகதாசன், கலையரசன் ஆகிய மூவரில் ஒருவர் இப்பதவிக்கு வரவேண்டுமென சுமந்திரன் செயற்பட்டுள்ளார். தலைவர் தெரிவுக்கு முன்னரும் தலைவர் தெரிவின்போதும் இவர்கள் மூவரதும் ஆதரவு தமக்கு இருந்தது என்ற அடிப்படையில் இவர்களில் ஒருவரை செயலாளராக்குவதில் சுமந்திரன் அக்கறை கொண்டிருந்ததாக தமிழரசின் கணிசமானோர் சொல்கின்றனர்.

வாக்கெடுப்பு நடைபெற்ற விதம், இரண்டு கைகளையும் உயர்த்திய வாக்களிப்பு முறைமை, வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற தன்மை என்பவைகள் பற்றி பல புகார்கள் இதுவரை வந்துள்ளன. இவைகள் அனைத்துமே செயலாளர் தெரிவு விடயத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

அனைவரையும் ஒன்றிணைத்து தமிழரசுக் கட்சிக்கு மீண்டும் பிராணவாயு ஏற்ற சிறீதரன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். என்றும் துணையாக இணைந்திருப்பேன் என்று தலைவர் தேர்தல் தோல்விக்குப் பின்னர் பகிரங்கமாக அறிவித்த சுமந்திரன் செயலாளர் தெரிவின்போது நடந்து கொண்ட விதமும், அது தொடர்பாக தலைவராகத் தெரிவான சிறீதரனுக்கு அனுப்பிய கடிதத்தை பகிரங்கமாக வெளியிட்டதும் ஏற்புடையதாகவில்லை.

தமிழரசு கட்சியைப் பொறுத்தளவில் தற்போதைய இடைக்காலம் என்பது ஓர் இடர்காலம்போல் காணப்படுகிறது. இவ்வேளையில் உட்கட்சி முரண்பாடுகளை ஏற்படுத்துபவர்கள் பக்கம் சுமந்திரன் சாரக்கூடாது என்பதுவே தமிழரசு கட்சியின் ஆதரவாளர்கள் பலரதும் எதிர்பார்ப்பு.

அனைவரையும் ஒன்றிணைத்து தமிழரசுக் கட்சிக்கு மீண்டும் பிராணவாயு ஏற்ற சிறீதரன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். என்றும் துணையாக இணைந்திருப்பேன் என்று தலைவர் தேர்தல் தோல்விக்குப் பின்னர் பகிரங்கமாக அறிவித்த சுமந்திரன் செயலாளர் தெரிவின்போது நடந்து கொண்ட விதமும், அது தொடர்பாக தலைவராகத் தெரிவான சிறீதரனுக்கு அனுப்பிய கடிதத்தை பகிரங்கமாக வெளியிட்டதும் ஏற்புடையதாகவில்லை.



# ‘வலிசுமந்த’ சகமனிதரை ஏமாற்ற வருகின்றனரா?

நியூசிலாந்து சிற்சபேசன்



சிங்கள - பௌத்த பேரினவாத மேலாண்மையும், அதனுடைய விளைவாக எழுந்த தமிழரின் சுதந்திர வேட்கையும், இலங்கைத்தீவின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். கல்வியில் தரப்படுத்தல், இனக்கலவரம் என ஒவ்வொரு நகர்வும் தமிழரின் சுதந்திர வேட்கையைத் தணியாத தாகமாக்கின. இனக்கலவரங்களின் நேரடி விளைவுகளிலே, புலம்பெயர்வு குறிப்பிடத்தக்கதொரு விடயமாகியது. 1983 இனக்கலவரம் புலம்பெயர்வின் முக்கியமான மைல்கல் சம்பவமாகியது. பெருமெடுப்பில் புலம்பெயர்வு ஆரம்பமாகியது.

இவ்வாறாகப் புலம்பெயர்ந்தோர் பயணஞ்செய்த பாதையெங்கும் ரோசாப்பூ இதழ்கள் சொரிந்து இருக்கவில்லை. கரடுமுரடாகவே இருந்தது. முதலைகள் நிறைந்த குளங்கள் இருந்தன. ஏற்ற இறக்கங்களுக்குப் பஞ்சம் இருக்கவில்லை.

ஆனாலும்கூட, சமத்துவமான மேற்கத்தியச் சூழலில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாய்ப்புக்களை பயன்படுத்தி வளம் பெற்றனர். கடின உழைப்புக்கு பலன் கிடைத்து. அதனால், கடந்த நான்கு சகாப்தங்களிலே, புலத்திலே நிலைப்பட்டுள்ளனர் என, பெருவெட்டிலேயேனும், சொல்லலாம். அவ்வாறாக, புலத்திலே நிலைப்பட்ட தமிழர்களை மூன்று வகையாக பார்க்கலாம்.

முதலாவது வகையினர், தமிழ் அடையாளங்களில் இருந்து விலகத் தொடங்கிவிட்டனர். தாயகத்துடனான தொடர்புகளை இழக்க ஆரம்பித்துவிட்டனர் என்று சொல்லலாம்.

இரண்டாவது வகையினர், தமிழ் அடையாளங்களைத் தக்க வைத்திருக்கின்றனர். புலத்தின் சூழலோடு இயைந்து, அடுத்த தலைமுறைக்கு, அடையாளங்களைக் கடத்துகின்றனர். தாயகத்துடன் இயல்பான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றனர். தாயகத்தில், பிறிதொருவரைக் கைதூக்கி விடுகின்ற பணிகளை காதும்காதும் வைத்தாற்போல் செய்கின்றனர். “வலதுகை கொடுப்பது, இடதுகைக்குக் கூடத் தெரியக்கூடாது” என்னும் பேச்சுவழக்குச் சொல்லாடலை தாரக மந்திரமாக கொண்டு செயல்படுகின்றனர்.

இந்த இரண்டுவகையினரையும், தாயகத்தின் பொதுவெளியில் அதிகம் அறியப்படாத புலம்பெயர்ந்தோர் என்று சொல்லலாம்.

மூன்றாவது வகையினரை, ‘அர்த்த ராத்திரியில் குடைபிடிக்கும்’ வகையறா என்று தயக்கமின்றி வகைப்படுத்தலாம். இவர்கள் தமிழ் அடையாளங்களைக் கொண்டிருகின்றனரா?, புலத்தில் ஆழமாக காலூன்றி உள்ளனரா?, தாயகத்தில் ஆழமான பற்றுக் கொண்டவர்களா? என்பவையெல்லாம் விடைதெரியாத கேள்விகளாகவே காணப்படுகின்றன. இவர்களிடம் ஒற்றைப்படையான அணுகுமுறையைக் காணமுடியவதில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்பவராகவே காணப்படுகின்றனர்.

ஒவ்வொரு சூழலுக்கும் பொருந்துகின்ற வகையில் “திடீர்” அவதாரங்களை எடுக்கக்கூடியவர்களாகத் தெரிகின்றனர். அதனால், தெளிவான சுயஅடையாளத்தைக் கொண்டிருப்பதில்லை.

இந்த மூன்றாவது வகையினரிடமே, அதிக அலப்பாறைகளைக் காணலாம். பொதுவெளியில் கவனத்தைப் பெறுவதில் அக்கறை கொண்டவர்கள்.

தீவிர தமிழ் அடையாளத்தைக் காட்டுவார்கள். தீவிர மதப்பற்றுள்ளவராக அல்லது, மதக் காவலராக நடமாடுவார்கள். தீடிரென, மேற்கத்தைய கனவான் வேஷத்துடன் வெளிப்படுவார்கள். ஆக, சுழலுக்கு ஏற்ப அடையாளத்தை மாற்றிக்கொள்வார்கள்.

ஏதோவொருவகையில், மீட்பர்களாக அடையாளப்பட பகீரதப்பிராயதனங்களை மேற்கொள்வார்கள். எந்தவகையிலேனும் தம்மை நிலைநிறுத்த, வெளிப்படையாகவே அவசரப்படுவார்கள். அதனால், சிலவேளைகளில் கோமாளித்தனமாகவும் தெரிவார்கள்.

இவர்களே, தாயகத்தின் அரசியல், சமயம், சமூகம் எனப் பல்வேறு தளங்களில் தடாலடியான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். உள்ளூர் அபிலாசைகள் தொடர்பில் இவர்களுக்கு கரிசனை இருப்பதாகக் கருதமுடியவில்லை. மாறாக, சுயநலனை மட்டுமே கவனிப்பவர்களாகத் தெரிகின்றனர். தம்முடைய எண்ணங்களை ஈடேற்றுவதற்கு தாயகத்தை களமாக பயன்படுத்த முனைகின்றனர். அவர்களுடைய பொருளாதாரவலிமை உள்ளூர் அபிலாசைகளைத் தூசாக்கிவிடுகின்றன.

அந்தவகையிலேயே, அண்மையிலே செய்தியில் உலாவிய புலம்பெயர்தமிழ் அமைப்பு என்று சொல்பவர்களின் நடவடிக்கைகளையும் கவனிக்க முடிகின்றது.

உள்ளூர் தரப்புக்களுடன் வெளிப்படையான உரையாடல்களை ஏற்படுத்தவில்லை. தமிழ் அரசியல், சமூகப் பொதுவெளியில் உள்ளவர்களை வெளிப்படையாகத் தொடர்புகொள்ளவில்லை. மாறாக, சிங்களப் பௌத்த தரப்புகளுடன் இரகசியமாக, வெளிநாடொன்றில், பேசியுள்ளனர். அதன் பின்னர் பௌத்த தேரர்கள் சகிதம் உலாத்தலுக்குப் புறப்பட்டனர். அதற்கு முன்னர், பௌத்த பீடங்களைச் சந்தித்து ஆசிபெற்றனர். அன்னியநாடொன்றின் தூதுக்குழு போன்று யாழ்ப்பாணம் போயிருந்தார்கள். அதிலேகூட, கிழக்கு மற்றும் வன்னிப் பகுதிகளைப் புறக்கணித்து விட்டனர்.

இவர்கள் யார்? யாருடைய பின்புலத்தில் இயங்குகின்றனர்? எங்கிருந்து வருகின்றனர்? என அனைத்துமே தமிழர்பரப்பில் உள்ளவர்களுக்குத் தெரியாத செய்தியாகவே இருக்கின்றது.

கவனத்தைச் சுண்டியிழுக்கும் கனதியான பெயரை அமைப்புக்குச் சூட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், வேர்களைக் கொண்டிருக்கின்ற, உயிரோட்டமுள்ள புலம்பெயர்ந்தோரின் அமைப்பாகக் கருத முடியவில்லை. தன்னார்வ தனிநபர் குழுவாகவே கருத முடிகின்றது.

ஆக, யாரோ சிலர் எங்கிருந்தோ வருகின்றனர். தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகச் சொல்கின்றனர். தமிழ் மக்களுக்குத் தெரியாமல் ஒரு பிரகடனத்தைத் தயாரித்துக்கொண்டு வருகின்றனர். யாருடைய பிரச்சினைக்குத் தீர்வு தேடுகிறார்களோ - அவர்களை ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை.

தொப்புள்கொடி உறவான தமிழ்நாடு ஏமாற்றுவதாக ஒரு புலம்பல் தமிழரிடையே உண்டு.

இப்போதெல்லாம், “இந்தமண்ணில் பிறந்தோம்” என்று சொல்கின்றவர்களே, “வலிசுமந்த” சகமனிதரை ஏமாற்ற வரிசை கட்டி வருகின்றனர். “யாரோடு நோகேன் யார்க்கெடுத்துரைப்பேன்” என்று அரற்றமால் இருக்க முடியவில்லையே.

> **யாரோ சிலர் எங்கிருந்தோ வருகின்றனர். தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகச் சொல்கின்றனர். தமிழ் மக்களுக்குத் தெரியாமல் ஒரு பிரகடனத்தைத் தயாரித்துக்கொண்டு வருகின்றனர். யாருடைய பிரச்சினைக்குத் தீர்வு தேடுகிறார்களோ - அவர்களை ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை.**

# மீண்டும் பேச்சு மேசைக்கு வந்துள்ள ‘எட்கா’....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது முழுமையான பொருளாதார முயற்சிகளுக்கான ஒரு சுதந்திர உடன்படிக்கையாகும். எனவே இலங்கையைப் பொறுத்து வர்த்தகப் பற்றாக்குறை ஏற்பட்டாலும் வேறு வழிகளில் இந்தியாவிலிருந்தான நிதி உட்பாய்ச்சல்கள் இலங்கைக்கு கிடைக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக இவ்வுடன்பாட்டின் மூலம் நேரடியான இந்திய முத லீடுகள் இலங்கையில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இத்தகைய உடன்பாடு எதுவும் இல்லாத நிலையி லும்கூட இன்று அதிகளவு இந்திய முத லீடுகள் இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வருவதை நாம் காணலாம். உடன் பாடு ஏற்படுமானால் இன்னும் பெரு மளவு இந்திய முதலீடுகள் இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்க முடியும். இதற்கு மேலாக உல்லாசப் பயணம் உட்பட இந்திய பயணிகளின் அதிகரித்த வருகையினால் வருமானம் உயரக்கூடும். மேலும் இந்தியாவிலிருந்து வரக்கூடிய தனி மற்றும் கூட்டு முதலீடுகள், தொழில் நுட்பப் பரிவர்த்தனை, திறன் சேவைகள் போன்றவற்றால் இலங்கையின் உற்பத்தி, ஏற்றுமதித் துறை விரிவடையவும் வாய்ப் புள்ளது. இவற்றின் மூலம் வெளிநாட்டி ருந்தான ஏற்றுமதி வருமானம் மற்றும் நிதி உட்பாய்ச்சல்கள் அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்படும் என எதிர்பாரக்க முடியும். இத்தகைய வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதியில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையைச் சீர்செய்ய உதவும். இதன் மூலம் நாட்டின் ஒட்டு மொத்த வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் களில் (சென்மதி நிலுவை) சமநிலையைப் பேணக்கூடியதாக இருக்கும். இவ்வாறு நிகழுமானால் இவ்வுடன்படிக்கை மூலம் இரு நாடுகளுமே நன்மை பெறமுடியும்.

‘எட்கா’ தொடர்பான பொருளாதார எதிர்வுகூறல்கள் எவ்வாறு இருப்பினும் அது தொடர்பாக அடுத்து இந்தியாவில் நடைபெறவுள்ள 13ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் அல்லது மிக அண்மிய எதிர்காலத்தில் இவ்விரு நாடுகளும் ஓர் உடன்பாட்டை எட்டுமா என்பதை எதிர்வு கூறுவது கடினமாக உள்ளது. ஏனெனில் இதற்கேற்ற ஒரு சமூக நிலைமை இப்போது இலங்கையில் காணப்படவில்லை. உறுதியற்ற நிலையில் நகரும் ஆட்சியதிகாரம், அதிகரித்து வரும் தொழிற்சங்கங்கள் மற்றும் எதிர்க் கட்சிகளின் எதிர்ப்புப் போராட்டங்கள், இவ்வாண்டின் இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் போன்ற பல காரணிகள் இதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன. எனினும் இவை போன்ற முட்டுக்கட்டைகளைப் பொருட்படுத்தாது தான் நினைத்தவாறு காரியங்களைச் செய்ய வல்லவர் என்பதை ரணில் அண்மைக்காலத்தில் நிரூபித்து வருகிறார் என்பதையும் மறுக்க முடியாது. உள்ளூராட்சித் தேர்தலை காலவரையறையின்றி தள்ளி யமை, வரிவிதிப்புகள்,விலையேற்றங்கள் தடையின்றித் தொடர்வது, நிகழ்நிலைக் காப்புச் சட்டம் போன்ற சட்டங்களின் நிறைவேற்றம் என்பன இதை உறுதிப் படுத்துகின்றன. இதே போல ‘எட்கா’ வும் நிறைவேற்றப்பட்டால் ஆச்சரியப் படத் தேவையில்லை. ஜனாதிபதித் தேர்தல் வருவதற்கு முன் இது நிறை வேறுவதற்கான சாத்தியமில்லாவிட்டா லும்கூட அதன் பின்னர் நிறைவேறு வதற்கான வாய்ப்பில்லை எனக்கூற முடியாது. அடுத்த ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச வந்தாலுங்கூட அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து இப்போது இவ்வுடன்பாட்டை எதிர்ப் பது போல அப்போது செய்ய முடியாது என்பதே யதார்த்தம். ஆனால் அனுரகுமார ஜனாதிபதியாக வருவதற்கான சாத்தியம் மிகக் குறைவு என்றாலும், அவர் ஜனாதிபதியாக வந்தால் இவ்வு டன்படிக்கைக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருக்கும்.

# தமிழரசு கட்சியின் தலைவராக சிறிதரனும் தமிழர் அரசியலும்



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத்தீர்வைக் காணும் முயற்சிகளிலும் வடக்கு, கிழக்கில் எதிர்நோக்கப்படும் பல்வேறு மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணும் முயற்சிகளிலும் தமிழ் அரசியல் கட்சிகள் ஐக்கியப்பட்டு ஒருமித்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களினதும் அவர்களின் நலன்களில் அக்கறைகொண்ட சிவில் சமூகம் மற்றும் அவதானிகளினதும் இடையறாத வேண்டுகோளாக இருந்து வருகிறது.

ஆனால், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அது குறித்து அக்கறை காட்டக்கூடிய மனநிலையில் இல்லை. ஏற்கனவே இருபது வருடங்களுக்கும் அதிகமான காலமாக பல்வேறு சமாச்சரியங்களுக்கு மத்தியிலும் கூட நீடித்து நின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பும் கடந்த முற்பகுதியில் இல்லாமற் போய்விட்டது.

கடந்தவாரம் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை சந்தித்த புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை அந்த கட்சிகள் ஐக்கியப்பட்ட ஓர் அமைப்பாக ஒருமித்து முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆனால், மற்றைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதில் தங்களுக்கு பிரச்சினை இருக்கிறது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேரடியாகவே உயர்ஸ்தானிகரிடம் கூறியதாகவும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்றை தனது கட்சி ஏற்றுக்கொள்வில்லை என்பதை அதற்கான காரணமாகக் கூறியதாகவும் செய்திகள் வெளியாகின.

வேறுபாடுகள் இருந்தாலும் ஒருமித்த நிலைப்பாட்டை எடுப்பது அறிவார்ந்த செயற்பாடாக இருக்கும் என்று சந்தோஷ் ஜா தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் கூறியதாகவும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணுமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியாவினால் கேட்க முடியுமே தவிர அது தொடர்பில் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டியது இலங்கையர்களின் பொறுப்பு என்று குறிப்பிட்டதாகவும் அந்த செய்திகள் தெரிவித்தன.

இலங்கை அரசாங்கத்துக்கு புதுடில்லி நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்பதே தமிழ் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கிறது. புதிய உயர்ஸ்தானிகரின் கருத்துக்கள் அது விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை அவர்களுக்கு தெளிவாக உணர்த்தியிருக்கும் எனலாம்.

தமிழ் கட்சிகளின் ஐக்கியத்தையும் ஒருமித்த நிலைப்பாட்டையும் குறித்த அவரின் அறிவுரையே இலங்கை தமிழர்களுக்கான அவரின் பிரதான செய்தி.



ஆனால், அது தொடர்பில் தமிழ் மக்களின் நலன்கருதி விட்டுக்கொடுப்புடனும் அக்கறையுடனும் பரிசீலிக்க தமிழ்க்கட்சிகள் முனைப்புக்காட்டுவாக இல்லை. மாறாக ஐக்கியம் என்பதை ஒவ்வொரு கட்சியும் அவற்றின் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அணுகப்பார்க்கின்றன என்றே தெரிகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மறுநாளே தமிழ் கட்சிகளை மீண்டும் ஐக்கியப்படுத்த முயற்சிக்கப்போவதாகவும் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பை மீட்டெடுக்க முயலப்போவதாகவும் கூறினார்.

ஆனால், தமிழரசு கட்சியுடன் முரண்பட்டுக்கொண்டு கடந்த வருட முற்பகுதியில் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய சில தமிழ்க்கட்சிகள் சிறிதரனின் அறிவிப்புக்கு அனுகூலமான சமிக்ஞையைக் காட்டவில்லை.

**கடந்த காலப் போராட்டங்களின் நினைவுகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சிந்தனை என்பது அந்த போராட்டங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு மாறிவிட்ட சூழ்நிலைக்கு பொருத்தமான முறையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான உருப்படியான தந்திரோபாயங்களை வகுப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும்.**

மாறாக, தாங்கள் ஏற்கெனவே அமைத்து வைத்திருக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் தமிழரசு கட்சி வேண்டுமானால் இணைந்து கொள்ளலாம் என்று கூறுகின்றன.

ஆயுதப்போராட்ட இயக்கங்களாக இருந்து பிறகு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்த இந்த கட்சிகள் கடந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் கண்ட அனுபவங்கள் காரணமாக மீண்டும் தமிழரசு கட்சியின் தலைமைத்துவத்தின் கீழான கூட்டமைப்பு ஒன்றில் பங்கேற்கத் தயாராயில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுதற்கான அணுகுமுறை தொடர்பில் தமிழரசு கட்சியின் தலைவர்களுடன் ஏற்பட்ட வேறுபாடுகளை அடுத்து அந்த கட்சிகள் ஏற்கெனவே தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பிலேயே நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தன. அந்த தேர்தல்கள் நடைபெறவில்லை என்பது வேறு விடயம்.

தமிழ்க் கட்சிகளின் ஐக்கியம்தான் முக்கியம் என்றால் அந்த கூட்டணியில் சிறிதரன் தலைமையிலான தமிழரசு கட்சி இணைந்துகொள்வதே முறையானது என்று அதன் பேச்சாளரான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்.

சிறிதரனிடம் இருந்து இது தொடர்பில் இதுவரையில் எந்த பிரதிபலிப்பும் வெளிவரவில்லை. பொதுச்செயலாளர் உட்பட கட்சியின் ஏனைய பதவிகளுக்கு தெரிவுகளைச் செய்ததில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை தொடர்பில் மூண்டிருக்கும் சர்ச்சையை அடுத்து கட்சியின் மகாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மகாநாட்டை விரைவில் கூட்டி தலைவர் பதவியை முறைப்படி பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு தலைவர் பதவிக்கு போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கடந்த வாரம் சிறிதரனுக்கு நீண்டகடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். அதற்கு இன்னமும் அவர் பதில் அனுப்பியதாக தெரியவில்லை.

தனது கட்சிக்குள் தோன்றியிருக்கும் தகராறுகளை தீர்த்துவைப்பதில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் சிறிதரன் தற்போதைக்கு தமிழ் கட்சிகளின் ஐக்கியம் குறித்து பேசுவார் என்று எதிர்பார்க்கமுடியாது. தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு கட்சிக்குள் தனது நிலையை வலுப்படுத்துவதற்கும் கட்சிக்குள் ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கும் முன்னதாக ஏன் தான் சிறிதரன் தமிழ் தேசிய கூட்மைப்பை 2009 ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைக்கு கொண்டுவருவது குறித்து அவசரப்பட்டுப் பேசினாரோ தெரியவில்லை.

**கொள்கை நிலைப்பாடுகள்**

இது இவ்வாறிருக்க, தலைவர் தெரிவுக்கு பிறகு சிறிதரன் வெளிப்படுத்தியிருக்கும் கொள்கை நிலைப்பாடுகள் குறித்து பார்ப்போம்.

அவர் ஊடகங்களுக்கு கருத்துக்களை கூறியிருந்தபோதிலும், ஜனவரி 28 திருகோணமலையில் நடைபெறவிருந்த தமிழரசு கட்சியின் மகாநாட்டில் முறைப்படி பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை வழிநடத்துவதற்கு கடைப்பிடிக்கப்போகும் கொள்கைகளை விளக்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. மகாநாடு ஒத்திவைக்கப்பட்டதால் அந்த முக்கியத்துவம் வாய்ந்த அந்த உரையை அவரால் நிகழ்த்த முடியாமல் போய்விட்டது.

**ஆயுதப் போராட்டத்தில் மாத்திரம் நம்பிக்கை வைத்துச் செயற்பட்ட ஓர் இயக்கத்தின் அரசியல் கோட்பாடுகளை பாராளுமன்ற அரசியலுக்கு பிரயோகிப்பதில் உள்ள அறவே நடைமுறைச் சாத்தியமற்ற தன்மை புரிந்து கொள்ளப்படவேண்டும்**

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பிறகு 2010 பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்று பாராளுமன்றப் பிரவேசம் செய்த 56 வயதான சிறிதரன் விடுதலை புலிகளின் தீவிரமான ஆதரவாளர். அதை பகிரங்கமாக சொல்வதற்கு ஒரு போதும் அவர் தயங்கியதில்லை. கடந்த 14 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் அவர் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் விடுதலை புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களை அடிக்கடி கூறிவந்திருக்கிறார். அதற்காக அவர் சரத் வீரசேகர, விமல் வீரவன்ச போன்ற கடும்போக்கு சிங்கள தேசியவாத அரசியல்வாதிகளின் கடுமையான கண்டனங்களுக்கும் ஆளாகி வந்திருக்கிறார்.

தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவான பின்னரும் கூட அவர் வெளியிட்ட கருத்துக்கள் விடுதலை புலிகளின் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆனால் ஆயுதப்போராட்டம் இல்லாத அரசியல் பாதையில் கட்சியை வழிநடத்துவதில் அவர் நாட்டம் கொண்டிருக்கிறார் என்பதை வெளிக்காட்டின.

அண்மையில் தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13 வது திருத்தம் தீர்வாக அமையப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் சிறிதரன் உறுதியாக இருக்கிறார் என்பது தெரிகிறது

ஒற்றையாட்சி வரையறைக்குள் காணப்படக்கூடிய எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யப்போவதில்லை என்று கூறிய அவர் தமிழ் மக்களின் பயணம் சமஷ்டி முறையொன்றை

(14ஆம் பக்கம் பார்க்க)



# கனடா கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பின் தைப்பொங்கல் விழா

**குரு அரவிந்தன்**

கனடாவில் இந்த வருடத் தமிழ் மரபுக் கொண்டாட்டங்கள் முடிவுக்கு வந்திருக்கின்றன. சென்ற ஞாயிற்றுக்கிழமை 28-1-2024 அன்று ‘கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பின்’ பொங்கல் விழாவும் மரபுத்திங்களும் மிகவும் சிறப்பாக ஒன்ராறியோ, எத்தோபிக்கோவில் கொண்டாடப்பட்டது. மங்கள விளக்கேற்றிக் கனடா தேசிய கீதம் தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு மொழிகள் கலந்து பாடப்பெற்றது. தொடர்ந்து தமிழ்வாழ்த்தும் அகவணக்கமும் இடம் பெற்றன.

தமிழர்களின் பாரம்பரியத்திற்கு அமைய பொங்கல் பற்றிய உரையும், மற்றும் மொழி, கலாச்சார, பண்பாட்டு நிகழ்வுகளும் இடம் பெற்றன. இதைவிட மன்றத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமிகளால் வரையப்பட்ட தமிழ் மொழி சார்ந்த பதாகைகளும் மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தமிழர்களின் உணவு வகைகள், ஆடை அணிகள், இசைக்கருவிகள் போன்றவையும் தமிழ்ப் பெரியோர்களின் படங்கள், மற்றும் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்கள் பற்றிய குறிப்புக்களும் அடையாளப் படுத்தப்பட்டன. பார்வையாளர்களுக்கு இளம் தலைமுறையினரே தமிழில் விளங்கங்களும் தந்தனர். தமிழ் மரபுத் திங்களின் நோக்கம் எதுவோ, அது இங்கே சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு, ஏனைய மன்றங்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது பாராட்டுக்குரியது.

மன்றத்தின் காப்பாளர்களில் ஒருவரான நவா கருணரட்ணராசா அவர்களின் உரையைத் தொடர்ந்து பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் உரை இடம் பெற்றது. ‘தமிழர்களுக்கான மொழி, கலாச்சாரம், பண்பாடு, மற்றும் இந்த மண்ணில் அவர்களுக்கு உள்ள உரிமைகள் போன்றவற்றைக் கொண்டாடுவதற்காக கனடிய அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது தான் மரபுத்திங்கள் நிகழ்வாகும். எனவே பெற்றோர்களே, பிள்ளைகளே, ஆசிரியர்களே வேறு எந்த புலம் பெயர்ந்த நாட்டிலும் கிடைக்காத இந்த அங்கீகாரம் எங்களுக்




குக் கிடைத்திருக்கின்றது. கிடைத்த சந்தர்ப் பத்தை நாங்கள் நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்’ என்று குறிப்பிட்டார்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் துணைத் தலைவரும், எழுத்தாளருமான குரு அரவிந்தன் தனது உரையில் ‘எங்கிருந்து திடீரென இந்த எழுச்சி வந்ததோ தெரியவில்லை, இம்முறை கனடாவின் மூலை முடுக்




கெல்லாம் மரபுத்திங்கள் கொண்டாடுகின்றார்கள். இது வரவேற்கப்பட வேண்டிய விடயமாக இருந்தாலும் எங்கள் பாரம்பரிய விழாவான தைப்பொங்கலை நாங்கள் மறந்துவிடக் கூடாது. இம்முறை நடந்த கொண் டாட்டங்களில் சிலர் தைப்பொங்கல் என்ற சொல்லையே தவிர்த்திருந்ததை நேரடியாகவே நான் அவ தானித்தேன், காரணம் தெரியவில்லை. இந்தநிலை தொடருமானால் இந்த மண்ணில் தமிழர்களின் தைப் பொங்கல் திருநாள் வெகுவிரைவில் மறக்கடிக்கப்பட்டு விடலாம். இந்த நிகழ்வில் பெற்றோரும் இளைய தலைமுறையினரும் ஆசிரியர்களும் ஈடுபாட்டுடன் பங்குபற்றி நிகழ்வின் நோக்கத்தை நிறைவேற்றியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது’ என்று குறிப்பிட்டார்.

எழுத்தாளர் இணைய தலைவர் அகணி சுரேஸ் அவர்களால் எழுதப்பட்ட தைப்பொங் கல் பாடலுக்கு பெண்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் சிலர் தமிழரின் பாரம்பரிய நடனமான கோலாட்ட நடனத்தை ஆடிக் கண்ணுக்கு விருந்தளித்ததைத் தொடர்ந்து அவரது உரை இடம்பெற்றபோது, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களைப் பாராட்டியிருந்தார்.

கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பின் தலைவி கமலவதனா சுந்தா அவர்கள் உரையாற்றும் போது, ‘கற்றறிந்தோர் பலர் வந்து இந்த நிகழ்வைப்பாராட்டியது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒற்றுமையாகச் செயற்பட்டால் இது போன்ற பல நல்ல விடயங்களைக் கனடாவில் பெண்களால் சாதிக்க முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு’ என்று குறிப்பிட்டார். நிகழ்ச்சிகளை நவகீதா முருகண்டி சிறப்பாகக் கொண்டு நடத்தினார்.

---




**பா. கதிர்,**
**குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கபட்டிருக்கிறாரே. இலங்கையில் அமைச்சர் ஒருவரையே கைதுசெய்திருப்பது ஆச்சரியத்தை தரவில்லையா உங்களுக்கு?

**வியுக்தியார்:** தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்து இறக்குமதி தொடர்பாகவே அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்தே அவர் சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து மாற்றப்பட்டார். அப்போது அவருக்கு ஆதரவாக மகிந்த தரப்பினர் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்ததனாலேயே அவர் அந்தப் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டபோதிலும், வேறு முக்கியமான அமைச்சு பதவி ஒன்று வழங்கப்பட்டது. ஆனால் இப்போது அவருக்கு எதிரான விசாரணையில் கைது செய்யப்பட்டிருக்கிறார். ரணிலை அறிந்தவர்களுக்கு இது ஆச்சரியமான ஒன்றாக இருக்காது என்றே நினைக்கின்றேன். உணவில் நஞ்சைக்கலப்பதும் தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதும் கிட்டத்தட்ட ஒன்றுதானே.

---

**எஸ் பீற்றர்போல்,**
**இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** நாட்டு மக்களின் அமோக வாக்குகளாலேயே தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாகவும், சிலரின் கோமாளித்தனமான செயல்பாடுகளால்தான் ஜனாதிபதி பதவியில் இருந்து தானாகவே விலகியதாகவும், மக்களின் ஆதரவு இன்னமும் தனக்கு இருக்கின்றது என்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** மக்களின் ஆதரவு தனக்கு இன்னமும் இருக்கிறது என்று அவர் எதை வைத்து சொல்கிறார் என்பது தெரியவில்லை. ஆனால் மற்றைய எல்லாமே சரி என்றுதான் நினைக்கின்றேன். அமோக ஆதரவுடன் வென்றதும் உண்மை. சிலரின் கோமாளித்தனமான செயல்பாடுகளால் என்பதும் சரியானதுதான். அந்தச் சிலரில் அவரும் இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்கிறாரா என்பதும் தெரியவில்லை. தானாகவே பதவி விலகினேன் என்பதும் சரியானதுதானே. அறகலய போராட்டக்காரர்களிடமிருந்து அவரைப் பாதுகாக்க, அவரது படையினர் தவறியபோது அவர் பாதுகாப்பு கருதி எங்கெல்லாமோ ஓடிஒழிய வேண்டிவந்ததும், கடைசியாக நாட்டைவிட்டு தப்பி ஓடியதும் உண்மைதான். ஆனால் மனுசன் பதவியை ராஜினாமாச் செய்யாமல் மூன்று மாதம் இருந்திருந்தால், அறகலய அடங்கிய பின்னர் திரும்பி ஜனாதிபதியாகவே வந்திருக்கலாமோ என்று இப்போது கவலைப்படுவதாகவும் அவருக்கு நெருக்கமானவர்களிடம் கூறியதாகவும் ஒரு செய்தி முன்னர் வெளிவந்திருந்ததே.

---

**சி. ராஜேஸ்வரன்,**
**கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** தென்னிந்தியாவின் பிரபல நடிகரான விஜய் ‘தமிழக வெற்றி கழகம்’ என்ற பெயரில் அரசியல் கட்சியை அறிவித்திருக்கிறாரே. இது சரியான முடிவு என்று நினைக்கிறீர்களா?

**வியுக்தியார்:** அவர் எடுத்த முடிவு சரியானதா இல்லையா என்பதை காலம் எமக்கு உணர்த்தத்தானே போகின்றது. இதற்கு முன்னரும் பல நடிகர்கள் அரசியல் கட்சிகளை தொடங்கியிருக்கின்றனர்தான். ஆனால் அவர்களில் நமது எம்.ஜி.ஆர்தான் ஜெயித்திருக்கிறார். ஆனால் அவரும் கூட திமுகவில் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்து, கட்சித் தலைவரிடம் கணக்குக் கேட்டதால் பிரிந்து தனக்கட்சி தொடங்கினாரே தவிர புதிதாக அரசியலுக்கு வரவில்லை. ஆனால் இவரோ சினிமாவில் உச்சத்தில் இருக்கும்போது அதனை விட்டு அரசியலுக்கு வருவது ஆச்சரியமானதுதான். ஆனால் இப்போது முக்கிய எதிர்க்கட்சியான அதிமுக ஒரு கவர்ச்சிமிக்க தலைவர் (எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போல) இல்லாமல் தடுமாறிக்கொண்டிருக்க அரசியலுக்கு இவர் வருவது அவருக்கு சாதகமாகவும் இருக்கலாம்.

---

**போல் சத்திதாசன்,**
**அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** சமூகத்தை எப்போதும் ஒரு கொந்தளிப்பான நிலையில் வைத்திருக்கவேண்டும் என்ற மனப்பான்மையோடு மிகவும் கீழ்த்தரமான நிலையில் தற்போதுள்ள ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றார்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளாரே. உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறாரோ?

**வியுக்தியார்:** நிச்சயமாக அவர் பொத்தம் பொது வில் இப்படிச் சொல்லும்போது அதற்குள் நாமும் தானே இருக்கிறோம். மாவட்டத்தில் அதிகாரிகள் சிலரின் நடத்தைகள் குறித்து எழுதும்போது பொதுவில் அதிகாரிகள் என்று எழுதினால் அதற்குள் அவரும்தான் வந்துவிடுவார். அதற்காக அவர் எல்லா அதிகாரிகளும் சரியாக பணியாற்றுகின்றனர் என்றோ, கீழ்த்தரமான நிலையில் இல்லை என்றோ வாதாடுவார் என்று நான் நம்பவில்லை.

---

**கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்.**

**கேள்வி:** தெற்கில் ஒரு சட்டம், வடக்கு - கிழக்கில் ஒரு சட்டத்தை அமுல்படுத்துவீர்களாக இருந்தால் வடக்கு, கிழக்கை பிரித்து தனிநாடாகத் தர வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** இப்படிக் கேட்டால் நாட்டைப் பிரித்துத் தருவார்கள் என்றால், அவர் எதற்காக அந்தக் காலத்தில் ஆயுதங்களுடன் போராடுவதற்கு புறப்பட்டிருந்தார் என்று தெரியவில்லை. இப்போதெல்லாம் நமது மக்கள் பிரதிநிதிகள் இப்படி ஏதாவது சொன்னால்தான், பத்திரிகைகள் அவற்றை செய்தியாக வெளியிடும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

---

**ஜி. கணேசமூர்த்தி**
**வாழைச்சேனை, கிழக்கு மாகாணம்.**

**கேள்வி:** ‘மைத்திரிபால சிறிசேன அரசியல் ரீதியில் பொய்யர், அவருடன் கூட்டு அரசியல் பயணத்துக்கு தயாரில்லை. பன்றிகள்தான் பன்றி பண்ணைக்குள் செல்லும், மாடுகள் மாட்டு தொழுவங்களுக்குள் செல்லும். நாம் சிங்கங்கள் இழு நிலைக்கு விழமாட்டோம். சிலவேளை எமது பக்கம் உள்ள சில பன்றிகள் அவற்றின் பண்ணை நோக்கி செல்லக்கூடும்.” என்று விமல் வீரவவன்ச கூறியிருக்கிறாரே?

**வியுக்தியார்:** தங்களை சிங்கங்கள் என்று சொல்லும் அவரே தங்களுடன் பன்றிகளும் இருக்கின்றன என்றும் சொல்கிறார். சிங்கங்கள் எப்போதாவது பன்றிகளுடன் இருந்ததுண்டா. இது அவர் சிங்கங்களையே அவமதிக்கும் வகையிலான கருத்து. பன்றிகள்தான் பன்றிகளோடு இருக்கும் என்பதால், தன்னோடு இருக்கும் பன்றிகளோடு இருக்கும் அவர் யார் என்பதை சொல்லியிருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

# மீண்டும் இந்தியா பக்கம் சாயும் மாலைதீவு: சீன ஆதிக்கத்தில் இந்திய பெருங்கடல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

மாலைதீவில் தற்போது மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிற நிலையில், அந் நாட்டு அதிபராக சீன ஆதரவு நிலைப் பாட்டை கொண்ட முகமது முய்சு செயற்பட்டு வருகிறார்.

**மீண்டும் இந்தியா உறவு ?**

மாலைதீவில் தொடரும் பதற்றமான சூழ்நிலையில் மாலைதீவு அதிபர் முக மது முய்சுவை பதவிநீக்கம் செய்து மீண் டும் எதிர்க்கட்சி தலைவர் இப்ராகிம் முகமது சொலிக் புதிய அதிபராக பதவி யேற்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவுக்கு எதிரான நிலைப் பாட்டை கொண்டுள்ள முய்சு பல்வேறு சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிற நிலையில் சீனாவிற்கு ஆதரவான தனது நிலைப்பாட்டையும் அழுத்தமாக வெளிப்படுத்தி வருகிறார்.

இந்நிலையில், ஜனவரி 28இல் மாலைதீவு நாடாளுமன்றில் அதிபர் முய்சு தலைமையிலான அரசில் புதிதாக நியமிக்கபட்டுள்ள நான்கு அமைச்சர்க ளுக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்க சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

இதன்போது ஆளும்கட்சிக்கும் இந் திய சார்பு நிலைப்பாட்டை கொண்ட எதிர்க்கட்சிக்கும் இடையே வாக்குவா தம் ஏற்பட்டு பின்னர் அது மோதலாக மாறிய நிலையில் பதற்றமான சூழல் உருவாகியது. ஆயினும் புதிதாக நியமிக் கப்பட்ட நான்கு அமைச்சர்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என எதிர்க் கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி எதிர்ப்பு தெரிவித்தது.

மாலைதீவு அதிபருக்கு எதிராக குற் றப்பிரேரணை தாக்கல் செய்யப்பட் டுள்ள நிலையில் தற்போது அவரை பதவிநீக்கம் செய்யவும் திட்டமிடப் பட்டு வருகிறது. இவ்வாறான சூழலில் நாடாளுமன்றத்தில் அதிபருக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறை வேற்றப்படும் பட்சத்தில் முய்சு, அதிபர் பதவில் இருந்து நீக்கப்பட்டு புதிய அதிப ராக எதிர்க்கட்சி தலைவர் இப்ராகிம் முகமது சொலிக் மீண்டும் பதவியேற்க லாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தற்போதைய மாலை தீவின் எதிர்க்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மாலைத்தீவு மற்றும் இந்தியா விற்கிடையிலான உறவு மீண்டும் பலம டையும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தீவுகளாலான ஒரு தீவு நாடு**

தீவுகளாலான ஒரு தீவு நாடு தான் மாலைதீவாகும். இந்தியாவின் இலட்சத் தீவுகளுக்கு தெற்கே அமைந்துள்ள மாலைதீவு குடியரசு நாடு. நிலபரப்பு அளவிலும், மக்கள் தொகை அளவிலும் தெற்காசியாவில் மிகச் சிறிய நாடாக விளங்கும் இந்நாடு, இந்திய பெருங் கடலில் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கி வருகிறது.

90,000 ச.கி.மீ. பரப்பளவுள்ள இத் தீவில் 5 லட்சத்துக்கும் குறைவான மக் கள் வாழ்ந்து வருகின்றனர். மொத்த முள்ள 1,192 தீவுகளில், சுமார் 200இல் மட்டும் மனிதக் குடியேற்றங்கள் காணப் படுகிறன. இதர தீவுகளில் விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைக்கு முக்கியத்து வம் அளிக்கப்பட்டு வருகின்றன.




1965ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சி யில் இருந்து விடுதலை பெற்ற மாலை தீவில், மீண்டும் சுல்தான் ஆட்சி முறை கொண்டுவரப்பட்டது. அதன்பின் 1968 ஆம் ஆண்டு, சுல்தான் மன்னராட்சி கலைக்கப்பட்டு குடியரசு நிறுவப்பட் டது. 1970களில் சுற்றுலாத் துறையின் மூலம் வலுவான பொருளாதார கட்ட மைப்பை இந்நாடு உருவாக்கியது. 1978 - 2008 வரை குடியரசுத் தலைவராக இருந்த அப்துல் ஹயூம் ஆட்சிக் காலம் இந்த வளர்ச்சிக்கு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

**இந்திய ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் மாலைதீவின் எதிர்க்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவுடனான உறவு மீண்டும் பலமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது**

இருப்பினும், இவரின் ஆட்சியின் பிற்பாதியில், ஜனநாயக சீர்த்திருங்கள் கோரப்பட்டன. அதிகாரவர்க்க எதிர்ப் பியங்கள் உருவாகின. இதில், முக்கிய மானவர் மொகமது நஷீத். பத்திரிகை யாளரான இவர் ஹயூம் ஆட்சிக் காலத் தின் போது 16 முறை சிறைக்கு அனுப்பப் பட்டார்.

ஆழமான, அடிப்படை யதார்த்தம் கொண்ட ஜனநாயகத்தை கோரிய இவ ரது போராட்டம் வெகுசன இயக்கமாக உருவானது. 2003ல் மாலத்தியர் ஜன நாயகக் கட்சியை தொடங்கினார். தொடர் போராட்டங்களின் விளைவு களால், 2008ல் மாலை தீவின் அரசிய லமைப்பு திருத்தம் செய்யப்பட்டது.

மொகமது நஷீத் தலைமையிலான கட்சி 2008ல் ஆட்சியமைத்தது. இருப் பினும், 3 ஆண்டு காலத்தை நிறைவு செய்வதற்கு முன்பே, 2012ல் இந்த ஆட்சி தூக்கி எறியப்பட்டது. 2012ல் அப்துல் ஹயூம் ஒன்றுவிட்ட சகோதரரான அப்துல் யமீன் ஆட்சி அமைத்தார். இந்த காலகட்டத்தின் தான், இந்திய-மாலை தீவு இருதரப்பு உறவில் தூரம் அதி கரித்து.

இந்தியா மாலை தீவின் அடையாளங் களை கரைத்து விட முயற்சிப்பதாகவும், அதன் இறையாண்மையை ஒடுக்க முயற் சிப்பதாகவும் மாலைதீவு மக்களிடையே கற்பிதங்கள் கொண்டு வரப்பட்டன. சீனா, சவுதி அரேபியா ஆகிய நாடு களிடையே அப்துல் யமீன் தலைமை யிலான அரசு நெருக்கம் கொள்ள தொடங்கியது. அத்துடன் காமன்வெல்த்



அமைப்பில் இருந்து வெளியேறத் தொடங்கியது.

**"இந்தியாவிற்கு முதல் முன்னுரிமை" கொள்கை**

2018ல் இந்தியாவிற்கு முன்னுரிமை வழங்கும் இப்ராஹிம் முகமது சோலே அதிபராக பொறுப்பேற்றார். "இந்தியா விற்கு முதல் முன்னுரிமை" என்பதுதான் தமது அரசின் கொள்கை என்று அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்நிலையில், கடந்த 2023ம் ஆண்டு, மாலத்தீவின் அதிபராக டாக்டர் முகமது முயிசு தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த தேர்தல் பரப்புரையில் , மாலை தீவில் இருந்து இந்திய ராணுவ அதிகாரிகளை வெளியேற்றுவோம் என்பதே இவரின் முதுலாவது முழக்கமாக இருந்து வந்தது.

அதேபோன்று, அதிபராக பொறுப் பேற்ற பின்னர் சீனா, துருக்கி ஆகிய நாடு களுக்கு தனது முதல் அரசு முறை பய ணத்தை மேற்கொண்டார்.

பொதுவாக, மாலைதீவு அதிபர்கள் தங்களது முதல் அரசு முறை பயணமாக இந்தியாவுக்கு வருகை வருவது வழக்கம்.

இன்றைய பொருளாதாரம் கடல்சார் போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாக, இந்திய பெருங்கடல் வழியே தான் அரேபிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் தங்களுக்குள் பண்ட பொருட்களை பரிமாறிக் கொள்கின்றன.

**'இந்தியா வெளியேறு' கொள்கை**

இந்தியாவுக்கும் மாலைதீவுகளுக்கும் இடையிலான உறவு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியப் பெருங்கடல் வட் டாரத்தில் மாலைதீவுகள் இந்தியாவின் முக்கிய அண்டை நாடாகக் கருதப்படுகி றது.

இந்திய அரசாங்கத்தின் 'அண்டை நாட்டுக்கு முன்னுரிமை' கொள்கையின் கீழ் மாலைதீவுகளுக்குச் சிறப்பு முன்னுரி மையும் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு மாலைதீவுகளின் அதிபராகப் பதவியேற்ற முகமது முயிசு சீனாவுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர் என்று கூறப்பட்டது.

இந்தியாவுக்கு முதல் இடம் கொடுக் கும் கொள்கையை முடிவுக்குக் கொண்டு வரப்போவதாகவும் முன்பு அவர் தெரி வித்திருந்தார். அத்துடன் அதிபர் திரு. முயிசு சீனாவிற்கு 5 நாள் அதிகாரத்துவ பயணம் மேற்கொண்டார். அத்துடன் மாலைதீவுகளும் சீனாவும் வர்த்தகம், பொருளியல் சார்ந்த பல முக்கிய ஒப்பந் தங்களில் கையெழுத்திட்டன.

**மாலைதீவு சுற்றுலாதுறை பாதிப்பு**

இந்தியாவுக்கும் மாலைதீவுகளுக்கும் இடையிலான சர்ச்சைகளின் விளைவாக, இந்தியாவின் சுற்றுலாதுறை பயணிகள் மாலைதீவுகளுக்குச் செல்வதற்கான விமானப் பதிவுகளை ரத்துச் செய்துள்ள னர். இதனால் மாலைத்தீவுகளின் சுற்றுலாதுறையைப் பாதிக்கும் நோக்கில் லட்சத்தீவுகள் பிரபலப்படுத்தப்படுவ தாகச் கருதி பாரிய பிரச்சாரம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.








# 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 600 சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, பெப். 04

76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறைக்கைதிகள் சிலருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

சுமார் 600 பேருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்தார். எவ்வாறாயினும், கடுமையான குற்றங்களை புரிந்தோர் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படமாட்டார்களென அவர் கூறினார்.

ஒழுக்கத்துடன் நடந்து கொண்ட மற்றும் அபராதத் தொகையை செலுத்த முடியாத கைதிகளுக்கே ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

இதனிடையே, இன்று நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவையொட்டி உறவினர்களை பார்வையிட சிறைக்கைதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கைதி ஒருவரை பார்ப்பதற்கு குடும்பத்தில் மூவருக்கு மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக ஊடகப் பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்தார். (அ)

# மாம்பழம் விற்கும் யுவதியை தாக்கிய பொலிஸ் அதிகாரி

சீருடையில் மாம்பழம் வாங்க வந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மாம்பழம் மற்றும் விலைக் காட்சிப் பலகையால் தாக்கியதாக மாம்பழம் விற்கும் 21 வயதான பெண் ஒருவர் ஹன்வெல்ல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மொனராகலை தொம்பகஹவெல அலெலந்தவை சேர்ந்த டி.உத்திக என்பவர் சிகிச்சைக்காக சாலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை கொழும்பு வீதியில் வனஹகொட பிரதேசத்தில் உள்ள பழக்கடை ஒன்றிற்கு மாம்பழம் கொள்வனவு செய்வதற்காக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வந்த போது, மாம்பழங்களின் விலை குறித்த விவாதம் முற்றியதையடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் மாம்பழம் மற்றும் விலைக் காட்சிப் பலகையால் தன்னைத் தாக்கியதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முதற்கட்ட விசாரணைகளின் போது, சீதாவக்க பிரதேசத்தில் கடமையாற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் குறித்த வர்த்தகப் பெண் தாக்கப்பட்டதாக தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

# நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு தயார்!

## அமைச்சர் டிரான் அலஸ் கூறுகிறார்



கொழும்பு, பெப். 04

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் மனித உரிமைகளை மீறும் வகையில் ஏதேனும் பிரிவு இருந்தால் அதனை முன்வைக்குமாறு எதிர்தரப்புகளிடம் கோரிக்கை விடுக்கப்படுவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அவ்வாறானதொரு சரத்து சுட்டிக்காட்டப்பட்டால் அதில் திருத்தங்களைக் கொண்டுவரத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்குத் தெரிந்த வரையில் அதில் மனித உரிமைகளை மீறும் எந்தப் பிரிவும் இல்லை எனவும் கூறினார். (அ)

# சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக இன்று கொழும்பில் விசேட போக்குவரத்துத் திட்டம்

கொழும்பு, பெப். 04

காலி முகத்திடல் பகுதியை அண்மித்த பல வீதிகள் நேற்று பிற்பகல் 2 மணி முதல் மூடப்பட்டுள்ள தாக பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார்.

76ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில், அதுவரை குறித்த வீதிகள் மூடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு சாரதிகளுக்கு அவர் அறிவுறுத்தல் விடுத்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செல்லும் மக்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுதந்திர தின விழாவையொட்டி போக்குவரத்து கடமைகளில் 5000 - இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ)

# தமிழரசு கட்சியின் தலைவராக...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப் படையாகக் கொண்ட தீர்வை நோக்கி யதே என்று குறிப்பிட்டார்.

தமிழர்களின் நிலம், மொழி மற்றும் கலாசார அடையாளங்களை அங்கீகரிக்கக்கூடிய வகையில் வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த தீர்வொன்றைக் காண்பதும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான ஒரு அரசியல் பாதையை வகுப்பதற்கு உதவுவதுமே தங்களது இலட்சியம் என்றும் அவர் கூறினார்.

மேலும், தாயகத்தில் உள்ள தமிழர்களையும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தையும் ஐக்கியப்படுத்தி அரசியல் பாதையொன்றை வகுப்பதில் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களுடன் இணைவது முக்கியமானது என்று குறிப்பிட்ட சிறிதரன் தமிழ் கட்சிகளின் ஐக்கியத்துக்கு அழைப்பு விடுத்ததுடன் தமிழ் தேசியவாத சக்திகளை ஐக்கியப்படுத்துவதிலும் சகல தமிழர்களுக்குமான ஒரு பாதையை வகுப்பதிலும் புலம்பெயர் தமிழ் சமூகத்துக்கு முக்கியமான வகிபாகம் இருக்கிறது என்றும் கூறினார்.

எல்லாற்றுக்கும் மேலாக தங்களது பயணம் ஈழ தேசிய விடுதலை போராளிகளின் கல்லறைகளில் இருந்து தொடங்க வேண்டும் என்று அவர் கூறியது முக்கியமாகக் கவனிக் கப்படவேண்டியதாகும்.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள தீவிரவாத நிலைப்பாடுகளைக் கொண்ட சக்திகள் உட்பட கடுமையான தேசியவாத உணர்வுடைய தனது ஆதரவாளர்களையும் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே அந்த கருத்துக்களை அவர் வெளியிட்டார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், தற்போது நடந்துமுடிந்திருப்பது ஒரு உட்கட்சித் தேர்தலேயாகும். தற்போதைய சூழ்நிலையில் சிறிதரனின் நிலைப்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது எவருக்கும் தெரியாது

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து சுமார் 15 வருடங்கள் கடந்த நிலையில், இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரத்துக்கு மத்தியில் இலங்கை தமிழர்களின் பிரதான அரசில் கட்சியின் தலைவராக வந்திருக்கும் சிறிதரனுக்கு தமிழ் மக்களுக்கு முன்னால் உள்ள சவால்களை முறையாக விளங்கிக் கொள்ளவேண்டிய தலையாய பொறுப்பு இருக்கிறது.

தமிழர்களின் மூன்று தசாப்த கால ஆயுதப் போராட்டத்தில் உயிர்த் தியாகத்தைச் செய்த தலைவர்களையும் போராளிகளையும் நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்துவதும் கடந்த காலப் போராட்டங்களின் நினைவுகளுடனேயே தமிழ் மக்களை கட்டிவைத்திருக்கக் கூடிய அரசியல் அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதும் வேறுபட்ட விவகாரங்கள்.

கடந்த காலப் போராட்டங்களின் நினைவுகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சிந்தனை என்பது அந்த போராட்டங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு மாறிவிட்ட சூழ்நிலைக்கு பொருத்தமான முறையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான தந்திரோபாயங்களை வகுப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

வெறுமனே உணர்ச்சிமயமான கற்பிதங்களுடன கடந்த காலத்தைக் காவியம் போன்று நினைவுபடுத்திக் கொண்டே இருப்பதில் உள்ள பொருந்தாத்தன்மையில் இருந்து தமிழரசு கட்சியின் தலைவர் தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும்.

ஆயுதப் போராட்டத்தில் மாத்திரம் நம்பிக்கை வைத்துச் செயற்பட்ட ஒரு இயக்கத்தின் அரசியல் கோட்பாடுகளை பாராளுமன்ற அரசியலுக்கு பிரயோகிப்பதில் உள்ள அறவே நடைமுறைச் சாத்தியமற்ற தன்மை புரிந்து கொள்ளப் படவேண்டும்.

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு முன்னரான காலப்பகுதியில் உணர்ச்சி வசமான சுலோகங்களை முழங்கி அன்றைய தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி தலைவர்களினால் வடக்கு, கிழக்கில் தமிழர்களை பிரமாண்டமான முறையில் அணிதிரட்டக் கூடியதாக இருந்ததைப் போன்று இன்று செய்வது இயலாத காரியம்.

இன்று தமிழ் மக்களின் தேவைகளும் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளும் பெருமளவுக்கு மாறிவிட்டன. பெரும்பாலான தமிழர்கள் அதுவும் முக்கியமாக வடக்கு தமிழர்கள் மேற்கு ஐரோப்பாவுக்கும் வட அமெரிக்காவுக்கும் புலம் பெயர்வது பற்றியே கனவுகண்டு கொண்டிருக்கிறார்கள்.

மண்ணில் நிலவும் உண்மையை பற்றிய பிரக்ஞை இன்றி நடைமுறைக்கு ஒவ்வாத தீவிரவாத சிந்தனையுடன் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இயங்கும் குழுக்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு வசதியாக அமையக்கூடிய சூழ்நிலையை தமிழ்ப் பகுதிகளில் தோற்றுவிக்கும் வகையிலான அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டும். ஏற்கெனவே கட்டுப்படியாகாத போர் ஒன்றைக் கடந்து வந்து இன்னமும் கூட வழமை வாழ்வுக்கு திரும்புவதற்கு போராடிக் கொண்டிருக்கும் தமிழ்மக்களை மீண்டும் இடர்பாடுகளுக்குள் தள்ளி விடக்கூடாது.

இந்த சந்தர்ப்பத்தில் கடந்த காலச் சம்பவம் ஒன்றை நினைவுபடுத்துவது பொருத்தமானதாக இருக்கும்

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு முன்னதாக 1975 ஆகஸ்ட் மாதம் என்று நினைவு. இலங்கையில் தனித்தமிழ்நாடு சாத்தியமா இல்லையா என்று தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினருமான வீ.தருமலிங்கத்துக்கும் (புளொட் தலைவர் சித்தார்த்தனின் தந்தையார்) சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் என். சண்முகதாசனுக்கும் இடையில் விவாதம் ஒன்று சுன்னாகம் சந்தை மைதானத்தில் இடம்பெற்றது.

சுன்னாகம் அன்று கணிசமானளவுக்கு இடதுசாரிகளுக்கு செல்வாக்கான பகுதியாக விளங்கியது. விவாதத்தின் நடுவராக தருமலிங்கத்தினதும் சண்முகதாசனினதும் ஆசிரியர் ஒறேற்றர் சுப்பிரமணியம் இருந்தார்.

ஒரு கட்டத்தில் சண்முகதாசன் தருமரை நோக்கி தனித்தமிழ்நாட்டை எந்த வழியில் அடையப்போகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு தருமர் எந்த வழி என்பது தங்களது இயக்கத்தின் இரகசியம் என்று பதிலளித்தார். மிகுந்த நகைச்சுவையுணர்வுடைய ஒறேற்றர் குறுக்கிட்டு தங்களது இயக்கத்தின் இரகசியம் என்று அவர் சொல்வதால் இரகசியத்தைக் கூறவேண்டும் என்று சண்முகதாசன் வலியுறுத்தக்கூடாது என்று கூறிவிவாதத்தை முடித்துவைத்தார்.

தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் அந்த இரகசியம் என்ன எனபதும் பிறகு தமிழர்களுக்கு நேர்ந்த அவலமும் கடந்த அரைநூற்றாண்டு வரலாறு.

இலக்கை அடைவதற்கு தெளிவானதும் நடைமுறைச் சாத்தியமுடையதுமான எந்தவிதமான சிந்தனையோ விளக்கப்பாடோ இன்றி மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிடும் அரசியல் முழக்கங்களைச் செய்த அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளினால் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அவலங்கள் இன்றைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும்.

இன்று சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வே தங்களது இலட்சியம் என்று கூறும் எமது தமிழ் அரசியல்வாதிகளில் எவராவது அந்த தீர்வை எவ்வாறு காண்பது என்பது பற்றி ஏதாவது சிந்தனை இருக்கிறதா? அதுவும் தருமர் அன்று கூறியதைப் போன்ற இரகசியமா?

இதற்குள் தமிழரசு கட்சியின் புதிய தலைவர் ஈழ தேசிய விடுதலை போராளிகளின் கல்லறைகளில் இருந்து பயணத்தைத் தொடங்குவது பற்றி பேசுகிறார்.

குழந்தையாக இராமர் இருந்த போது வானத்தில் உள்ள நிலாவைப் பிடித்து கையில் தந்தால்தான் சாப்பிடுவேன் என்று அடம்பிடித்து அழுததாக ஒரு கதை உண்டு. தாயார் கோசலை எதுவும் செய்யமுடியாமல் வசிசிட்ட முனிவரின் உதவியை நாடவே அவரும் சிறிது நேரம் யோசித்து விட்டு ஒரு கண்ணாடியை எடுத்துவந்து அதில் நிலாவைத் தெறிக்கவைத்து குழந்தை இராமரின் கையில் கொடுத்தாராம். அவரும் தனது கையில் நிலா கிடைத்துவிட்டது என்ற திருப்தியில் அழுகையை நிறுத்தி தாயார் உணவை ஊட்ட தாராளமாகச் சாப்பிட்டாராம்.

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கையை அன்று தமிழ் தலைவர்கள் முன்வைத்ததை பற்றி தருமருடனான அந்த விவாதத்தில் சண்முகதாசனே இந்த கதையையும் கூறினார்.

இன்று மீண்டும் அரை நூற்றாண்டுக்கு பிறகு தமிழர்களுக்கு கண்ணாடியில் நிலாவைக் காட்டும் அரசியல் வேண்டாம். •

ஈழநாடு



## தமிழரசையும்....

ஒன்றிணைந்து செயல்படுகின்றோம்.

எங்களை பொறுத்தவரை அனைவரும் பொதுச் சின்னம் ஒன்றில் பயணிக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரனின் கூற்றை நான் வரவேற்கின்றேன். ஒரு பொதுச் சின்னத்தில் நாங்கள் அனைவரும் அணி திரள்வோம்.

பொதுச் சின்னத்திற்கு வீட்டுச் சின்னம் கூட மாற்றப்பட்டால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. தனிப்பட்ட கட்சிக்குள் கூட்டாக இருப்பது நன்றாக அமையாது.

பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம்-என்றார். (அ)

## 76ஆவது....

கலந்துகொள்ளவுள்ளார்.

இம்முறை சுதந்திர தின விழாவை பல்வேறு கலை நிகழ்வுகள் அலங்கரிக்கவுள்ளதுடன், முப்படைகளின் அணிவகுப்புகளும் கோலாகலமாக இடம்பெறவுள்ளன.

மரியாதை அணிவகுப்பிப்பில் இராணு வத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 3,461 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆயுதம் தாங்கிய வாகனங்கள் உள்ளிட்ட 69 வாகனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

விமானப்படையை பிரதிநிதித்துவப் படுத்தி 19 விமானங்களும் இம்முறை சுதந்திர தின கொண்டாட்ட அணிவகுப்பில் கலந்துகொள்ளவுள்ளன.

7 ஹெலிகொப்டர்கள், 16 ரக 5 விமானங்கள், 3 ஜெட் விமானங்கள் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

இலங்கை கடற்படையின் 1009 உறுப்பினர்களும் இம்முறை சுதந்திர தின கொண்டாட்ட அணிவகுப்பில் இணைய வுள்ளனர். (அ)

## சுதந்திர....

இதேவேளை, தாய்லாந்து பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதுடன், இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்விலும் பங்கேற்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் வர்த்தக அமைச்சர், இலங்கை வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளின் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## கெஹலிய....

கெஹலிய ரம்புக்வெல மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

நேற்று முன் தினம் காலை வாக்கு மூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில் அவர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

தரமற்ற இம்யூனோகுளோப்ளின் தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று முன் தினம் காலை 9 மணியளவில் அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்படி, சுமார் 10 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# நிரம்பி வழியும் சிறைச்சாலைகள்

கொழும்பு , பெப். 04

2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி வரை நாட்டில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்படக்கூடியவர்களில் 232 வீதம் பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகளில் முகாமைத்துவ தணிக்கையின் செயல்திறன் தணிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையின்படி, நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்படக் கூடிய மொத்த கைதிகளின் எண்ணிக்கை 11,291 ஆக இருந்தாலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் கைதிகளின் எண்ணிக்கை 26,176 ஆகும். அவர்களில் 9,449 பேர் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர் மற்றும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை 16,727 ஆகும்.

அதன்படி, அவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 232% என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. டிசம்பர் 31, 2015 நிலவரப்படி, சிறையில் அடைக்கப்பட்ட மக்களின் சதவீதம் 139% ஆக இருந்தது, அது 7 ஆண்டுகளில் 232% ஆக அதிகரித்துள்ளது.

அறிக்கையின்படி, பெரும்பாலான குற்றவாளிகள் 30-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மற்றும் அவர்களில் 53% பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை பராமரிப்பதற்காக அரசாங்கம் வருடமொன்றுக்கு சுமார் எட்டு பில்லியன் ரூபாவை செலவிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் காவல்துறையினரின் நடவடிக்கையின் கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். 2024 ஆம் ஆண்டளவில் சிறைச்சாலைகளில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 232% ஆக இல்லாமல் 290% ஆக அதிகரித்துள்ளது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய சுட்டிக்காட்டுகிறார்.

நகர்ப்புற சிறைகளில் நெரிசல் மிக அதிகமாக இருப்பதாகவும், அது 300% வரை இருப்பதாகவும் அவர் குறிப்பிடுகிறார். சிறைச்சாலைகளில் தற்போது 32,735 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் மொத்த கைதிகளின் எண்ணிக்கை 11,700 எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கோட்டாவின் தனிப்பட்ட செயலாளர் திடீர் விலகல்



கொழும்பு , பெப். 04

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பிரத்தியேக செயலாளராக பல வருடங்களாக பதவி வகித்த சுகீஸ்வர பண்டார அந்த பதவியை இராஜினாமா செய்துள்ளதாக சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அவரின் தனிப்பட்ட செயலாளராக சுகீஸ்வர பண்டார பதவி வகித்தார்.

நிமல் லான்சா தலைமையிலான கட்சியுடன் இணைந்து தீவிர அரசியலில் ஈடுபடுவதற்காக அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக சிங்கள வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சிறிதரன்....

சாந்தனின் தாயாரின் கோரிக்கைக் கடிதம் மற்றும் மேலதிக தகவல்களை தருமாறும் ஜனாதிபதி இலங்கை சிறீதரன் எம்.பியிடம் கோரியுள்ளார். (அ)

## இலங்கைக்கான....

உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதாக அண்மையில் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஸ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் இலங்கை அரசாங்கம், தம்முடன் பேச்சுவார்த்தைகளில் தீவிரத்தை காட்டாது போனால், சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த மதிப்பாய்வு மற்றும் இலங்கைக்கான தவணையைத் தடுக்க தனியார் கடன் வழங்குபவர் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள் என்றும் ஆங்கில ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னைய ஆட்சியை விட சிறப்பாக செயற்படுவார் என்ற நம்பிக்கையில் அனைவரும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

நிறைய நம்பிக்கை இருந்தது, ஆனால் இப்போது அது மிகவும் ஏமாற்றமாக மாறுகிறது என்றும் தனியார் கடன் வழங்குநர் தரப்பை கோடிட்டு, அந்த ஊடகம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இதேவேளை உள்நாட்டு அரசியல் மற்றும் வரவிருக்கும் தேர்தல்கள் காரணமாக தனியார் கடனாளிகளை கையாள்வதில் இலங்கை மிகவும் மெதுவான வேகத்தில் நகர்கிறது என்று தனியார் கடன் வழங்குநர்கள் சந்தேகிக்கின்றனர்.

விமர்சனத்திற்கு ஆளாக நேரிடும் என்ற அச்சத்தில் தனியார் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தம் செய்ய ஜனாதிபதி விரும்பவில்லை" என்றும் தனியார் கடன் வழங்குனர் தரப்புக்கள் சந்தேகிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, அரசாங்க ஆலோசகர்கள் பிணைமுறி வைத்திருப்பவர்களின் ஆலோசகர்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

பத்திரம் வைத்திருப்பவர்கள் மற்றும் வணிகக் கடன் வழங்குபவர்கள் உட்பட அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் நன்மை பயக்கும் கடன் தீர்வை விரைவில் முடிக்க இலங்கை விரும்புகிறது என்று அவர் கூறினார்.

கடன் பத்திரம் வைத்திருப்பவர்கள் தமக்கு மிகவும் முக்கியமானவர்கள் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

## ரணிலுடன்....

பேச்சுவார்த்தைகளையும் குதிரை பேரத்தையும் ஆரம்பித்துள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச போட்டியிடுவதை அக்கட்சி உறுதிப்படுத்தியுள்ளது.

மறுபுறம் ஜே.வி.பி எனப்படும் மக்கள் மத்தியில் ஆதரவு வலுப்பெற்றுள்ளதாக கருதப்படும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்க போட்டியிட உள்ளார்.

இப்பின்னணியில், ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவில் மாத்திரம் இன்னமும் ஜனாதிபதி வேட்பாளர் யாரென உறுதியான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நியமிக்க வேண்டுமென பொதுஜன பெரமுனவின் சில முக்கிய தலைவர்கள் வலியுறுத்தி வரும் பின்புலத்தில் ஒரு சிலர் அதற்கு எதிர்ப்பையும் வெளியிடுகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுஜன பெரமுனவுக்கும் ரணிலுக்கும் இடையில் தீர்மானமிக்க சந்திப்பொன்று இடம்பெற்றது.

இருந்தாலும், கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் ரணிலுக்கும் பொதுஜன பெரமுனவினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது.

இந்தக் கூட்டம் முதலில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறு என பொதுஜன பெரமுனவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பின்னர் ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றப்பட்டதாலேயே இந்த வாக்குவாதம் ஏற்பட்டது.

அத்துடன், கூட்டத்தில் முதலில் பொதுஜன பெரமுனவினர் மாத்திரமே கலந்துகொள்வார்கள் என தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும், பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சா தலைமையிலான கூட்டணி, சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் மற்றும் ஏனைய சில உறுப்பினர்களும் கலந்துகொண்டமையால் பதற்றம் ஏற்பட்டது.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுனவின் பொது வேட்பாளராக அறிவிக்க வேண்டுமென்ற சிபாரிசுகள் முன்மொழியப்பட்டன.

இருந்தாலும், ரணிலை வேட்பாளராகத் தெரிவு செய்வதற்கு முன்னர் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட வேண்டுமென அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில், ஜனாதிபதி ரணில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தமது விருப்பம் பற்றி வெளிப்படுத்தியதன் பிரகாரம் இவ்வாறு பொதுஜன பெரமுனவின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஏனைய கட்சிப் பிரதிநிதிகள் சந்திப்பில் உள்வாங்கப்பட்டமை குறித்து விரக்தியை வெளிப்படுத்திய பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், ஜனாதிபதித் தேர்தல் விடயங்கள் குறித்து திடீரென கலந்துரையாடுவதற்கு தமது கட்சி தயாராக இல்லை எனவும் வலியுறுத்தியுள்ளார்.

எந்தவொரு தேர்தல் கலந்துரையாடலுக்கும் முன்னர் குறிப்பிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்திய விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, நேரமின்மை காரணமாக தனியான கூட்டங்களை நடத்த முடியுமா? எனக் கேள்வியெழுப்பியதுடன், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி போன்ற எதிர்க்கட்சிகளின் தீவிர ஈடுபாட்டை அவர் மேற்கோள் காட்டினார்.

இதற்கு பதிலளித்த சாகர காரியவசம், பொதுஜன பெரமுன ஏனைய கட்சிகளில் இருந்து வேறுபட்டு செயற்படுவதாகவும், ஜனாதிபதியுடன் தனியான சந்திப்பை வலியுறுத்துவதாகவும் தெரிவித்தார். எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பது குறித்து பொதுஜன பெரமுன இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

ஆனால், பொதுஜன பெரமுனவின் சார்பில் கலந்துகொண்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களும், முக்கிய அமைச்சர்களும் ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனால் கட்சிக்குள் இரண்டை நிலைப்பாடு காணப்படுவதாகவும் தெரியவருகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடமைக்க 1,500 மில்லியன் ரூபாய்

கொழும்பு, பெப். 04

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களை இந்த ஆண்டில் மீள் குடியேற்றுவதற்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்த ஒதுக்கீட்டின் படி, 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான 833 வீடுகளும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 1,000 வீடுகளையும் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 27,322 வீடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 28, 619 வீடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 29, 762 வீடுகளும் வவுனியா மாவட்டத்தில் 23,068 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மன்னார் மாவட்டத்தில் 16, 227 வீடுகளும் திருகோணமலை மாவட்டத்தில் 10,039 வீடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 12,098 வீடுகளும் அம்பாறை மாவட்டத்தில் 1,713 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, மொத்தம் 148,848 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# யாழில் இருந்து சட்டவிரோதமாக தமிழகத்துக்கு சென்றவர் கைது!

சென்னை, பெப். 04

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாகப் படகு மூலம் தொண்டி கடற்கரை சென்று அங்கிருந்து மண் டபம் பகுதிக்குச் சென்ற ஒருவர் தமிழகப் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்தோர் அமல்ராஜ் (வயது 33, மன்னார்) என்ப வரே இவ்வாறு இந்தியா சென்றுள்ளார்.

மேற்படி நபர் யாழ்ப்பாணம், குருநகரில் இருந்து மீன்பிடிப் படகில் சென்று தொண்டியில் இறங்கி அங்கிருந்து இராமேஸ்வரம் பஸ்ஸில் மண்டபம் பகுதிக்குச் சென்ற சமயம் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே இரு தடவை இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் மீண்டும் சட்ட விரோதமாக இந்தியா சென்றுள்ளார்.

தலைமன்னாரில் இருந்தே படகில் வந்ததாகத் தமிழகப் பொலிஸாரிடம் இவர் பொய் உரைத்தபோதும் கைத்தொலைபேசியில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயக் கோபுரம் உள்ளிட்டவற்றை ஒளிப்படம் எடுத் திருப்பதன் மூலம் யாழ். குருநகரில் இருந்து பயணித்தமை இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# யாழ்ப்பாண சிறைச்சாலையில் இன்று 22 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 04

யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து 22 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாண சிறைச்சாலைகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலை செய்யப்படவுள்ள கைதிகள் சிறு குற்றங்கள் புரிந்து , நீதிமன்றங்களில் தண்ட பணம் செலுத்தாத குற்றச்சாட்டுகளால் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட22 கைதிகள் இன்று காலை 9.15 மணிக்கு விடுதலை செய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாண சிறைச்சாலைகள் தெரிவிக்கின்றன. (அ)

# ஐ.தே.கவின் தேர்தல் நடவடிக்கை குழுவின் தலைவராக ரொனால்ட்!



கொழும்பு, பெப். 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் நடவடிக்கைக் குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேராவை நியமிக்க கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் ஏனைய கட்சிகளுடன் ஒருங்கிணைத்து செயற்படுவது இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதான கடமைகளில் ஒன்றாகும். இது தவிர கட்சியின் பிரசார பொறிமுறையும் இந்தக் குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வழிநடத்தல் குழுவின் ஏனைய உறுப்பினர்க ஷளாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட முகாமையாளர் லசந்த குணவர்தன, சிறிகொத்த நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷமல் செனரத், செயற்குழு உறுப்பினர் கிரிஷான் தியோடர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கு மேலும் பல குழுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கான திட்டத்தை வழங்குமாறு ஜனாதிபதி இந்த குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# சாந்தன் மிக விரைவில் இலங்கைக்கு வருவார்

## ஈ.பி.டி.பி பேச்சாளர் சிறிரங்கேஸ்வரன்

வடமராட்சி, பெப். 3

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதந்திரராசா மிக விரைவில் இலங்கை வருவார் என்றும் இது தேசிய நல்லிணக்கத்தின் ஊடகவே சாத்தியமாகிறது என ஈழ மக்கள் ஜனநாயக கட்சிப் பேச்சாளர் ஐ. சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று சனிக்கிழமை பருத்தித்துறையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு இந்திய உச்ச நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தன் என்று அழைக்கப்படுகின்ற தில்லையம்பலம் சுதேந்திரராசா அவர்கள் இலங்கை வருவது




தொடர்பாக ஊடகங்களிலே பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

உண்மையில் அவர் இலங்கைக்கு வருவதற்கு அவர்களுடைய பெற்றோர் எங்களுடைய கட்சி தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவாந்தாவிடம் அணுகி தங்களுடைய மகனை இலங்கைக்கு அழைத்து வருவதில் உள்ள தடைகள், பாதுகாப்பு தரப்பின் அனுமதிகளை பெற்றுத்தருமாறு கோரியிருக்கிறார்கள்.

எங்களுடைய அமைச்சர் தேசிய நல்லிணக்கத்தை தென்னிலங்கை தரப்புக்களுடன் வளர்த்ததனால் அல்லது நட்பை வளர்த்ததனால் அவற்றைப் பின்பற்றியதன் ஊடாக நாங்கள் சாத்தியப்படுத்தக் கூடிய தான சமிக்கைகள் தெரிகின்றன.

சாந்தனுடைய தாயார் 77 வயதுடைய தில்லையம்பலம் மகேஸ்வரி அம்மையார் தன்னுடைய மகனை தன்னுடைய முதுமை காரணமாக இந்தியாவிற்கு சென்று மகனை பார்க்க முடியாதுள்ளதாகவும் ஆகவே மனிதாபிமான அடிப்படையில் தனது மகனை இலங்கைக்கு அழைத்துவர தங்களாலான உதவிகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

அந்த வகையில் தென்னிலங்கையில் அரசுடன் அமைச்சர் தொடர்பு கொண்டதன் ஊடாக அவருடைய வருகை விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

தேசிய நல்லிணக்கம் தான் இவ்வாறான வாய்ப்புக்களை சந்தர்ப்பங்களை உருவாக்கி தந்திருக்கிறது-என்றார். (அ-02)

# இந்திய நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது



கொழும்பு, பெப். 04

இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன் எஸ் 'கரஞ்ச்' நேற்று சனிக்கிழமை கொழும்பு துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த நீர்மூழ்கிக் கப்பலை இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

67.5 மீற்றர் நீளமுள்ள ஐஎன்எஸ் கரஞ்ச் நீர்மூழ்கிக் கப்பலானது 53 ஊழியர்களுடன் கப்பலின் கட்டளைத் தளபதி அருணாப் தலைமையில் வருகை தந்துள்ளது.

கப்பல் வருகையை முன்னிட்டு இடம் பெறவுள்ள நீர்மூழ்கிக் கப்பல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இலங்கை கடற்படையினர் பங்கேற்கவுள்ளனர்.

அத்தோடு, நீர்மூழ்கிக் கப்பல் குழுவினர் நாட்டின் சில சுற்றுலாத் தலங்களை ஆய்வு செய்ய உள்ளனர்.

ஐஎன்எஸ் 'கரஞ்ச்' நீர்மூழ்கிக் கப்பல் உத்தியோக பூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு நாளை நாட்டை விட்டு வெளியேறவுள்ளது. (அ)

# சமன் பெரேராவின் குடும்பத்தாரின் கட்டுப்பாட்டில் மக்கள் சக்தி கட்சி

கொழும்பு, பெப். 04

எமது மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சமன் பெரேரா கொலை செய்யப்பட்ட பின்னர், கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதை தன்னால் அறிந்துக்கொள்ள முடியாமல் இருப்பதாக அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது மக்கள் சக்தி கட்சியை சமன் பெரேராவின் குடும்ப உறுப்பினர் களே கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அந்த கட்சியை சேர்ந்த எவருடனும் நான் தொடர்புகளை வைத்திருக்கவில்லை.

சமன் பெரேராவின் மறைக்கு பின்னர், வெற்றிடமாகியுள்ள கட்சியின் தலைவர் பதவிக்கு யாரை நியமிக்க போகின்றனர் என்பதை அறிந்துக்கொள்ள அவரது குடும்ப உறுப்பினர்களை தொடர்புக் கொள்ள முயற்சித்த போது அது முடியாமல் போனது.

கட்சியின் புதிய தலைவர் யார் என்று எனக்கு தெரியாது.

எமது மக்கள் சக்தி கட்சி கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டதுடன், 57 ஆயிரம் விருப்பு வாக்குகளை பெற்றிருந்தது. அதன் காரணமாக அந்த கட்சிக்கு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்று கிடைத்தது-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

சு.அருண் பிரசாத்

மகாகவி பாரதி மறைந்து ஒருநூற்றாண்டு முடிந்துவிட்டது. ஆனால், அவரது சொற்களோ தினமும் புதிதாகப் பிறக்கின்றன. அன்றையநாளின் பொருத் தப்பாட்டுக்கு ஏற்பப் புதியபொருளில் ஒளிர்கின்றன - என்பதாக இக்கட்டுரை யைத் தொடங்க நான் திட்டமிட்டிருக்க வில்லை. மாறாக, 2023இல் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) எத்தகைய விளைவு களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் பற்றிய சிறுஒப்பீட்டுடன்தான் தொடங்கியிருந்தேன். 2022ஆம் ஆண்டின் 'கற்றதும் பெற்றதும்' தொடரில், அந்த ஆண்டின் தொழில்நுட்ப மேம்பாடு குறித்த ஒரு கட்டுரையில் மட்டுமே செயற்கை நுண்ணறிவின் (ஏஐ) 'சாத்தியங்கள்' பற்றிப் பேசப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு (2023) 'கற்றதும் பெற்றதும்' தொடரில் வெளியான கட்டுரைகளில் பாதிக்கும் மேல், பல்வேறு துறைகளில் ஏஐ கொண்டு வந்திருக்கும் மாற்றங்கள்-விளைவுகளை அலசியிருக்கின்றன.

இதை எழுதிய நொடியில்தான், 'கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்களெல்லாம் - அற்ப மாயைகளோ? - உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?' என்கிற பாரதியின் வரிகள் நினைவில் மின்னலாக வெட்டின. 'நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே' எனத் தொடங்கும் இப்பாடலுக்கு, 'உலகத்தை நோக்கி வினவுதல்' எனத் தலைப்பிட்டிருக்கிறார் பாரதி ('பாடல் திரட்டு' என்று பாரதியார் பெயர் சூட்டிய ஒரு திரட்டில் 29 பாடல்கள் இடம்பெற்றிருந்தன. அதில் ஒன்று இப்பாடல். பாரதியார் காலமான பிறகு பாரதியாரின் மனைவி 'பாரதி ஆச்ரமம்' என்கிற பெயரில் தொடங்கி நடத்திய பதிப்பகத்தின் வழியாகச் 'சுதேச கீதங்கள்' முதற்பாகம் (1922) என்ற தலைப்பில் வெளியிட்ட தொகுப்பில் இந்தப் பாடல் 90ஆவதாக இணைந்துள்ளது (ப.1065, தமிழ்ப் பல்கலைப் பதிப்பு) தகவல்: ஆய்வாளர் பழ.அதியமான்). செயற்கை நுண்ணறிவின் தவிர்க்க முடியாத செல்வாக்கு எல்லா துறைகளிலும் படர்ந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில், நாம் கற்பதும், கேட்பதும், கருதுவதும் மெய்யா பொய்யா? அவற்றுக்கு ஆழ்ந்த பொருள் உண்டா? இந்தப் பின்னணியில், உலகத்தை நோக்கிய பாரதியின் கேள்விகளை நாம் சமகாலப்படுத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.




**பெருந்தரவும் 'நம்பகத்தன்மை'யும்:**

உலகம் இன்று பெருந்தரவுகளால் (Big data) ஆளப்படுகிறது. அரசும் பெருநிறுவனங்களும் முழுவதுமாகப் பெருந்தரவுகளைச் சார்ந்தே இயங்கிவருகின்றன. 800 கோடி உலக மக்கள் தொகையை நிர்வகிக்கும் 'லட்சுமண ரேகை'யாகப் பெருந்தரவு உலகம் முழுவதும் நீள்கிறது. ஃபேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்) உள்ளிட்ட சமூக ஊடகங்களின் அசாத்திய எழுச்சி, கடந்த தசாப்தத்தில் போலிச் செய்திகளின் கட்டுப்பாடற்ற பெருக்கத்துக்கு வழிவகுத்தது. பாரம்பரியச் செய்தி ஊடகங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்த அந்தப் போக்கு, இன்று ஏஐ சாத்தியப்படுத்தியுள்ள ஆழ்நிலைப் போலிகள் (deep fake) மூலம் தீவிரமடைந்துள்ளது. பெருந்தரவுகளைக் கொண்டு இயங்கும் ஏஐ தொழில்நுட்பம், மனிதகுலம் எதைக் கற்க, கேட்க, கருத வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் பரிணமித்திருக்கிறது.




மெரியம் வெப்ஸ்டர், ஆக்ஸ்போர்டு, காலின்ஸ் போன்ற உலகப் புகழ்பெற்ற ஆங்கில மொழி அகராதிகள், ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் 'ஆண்டின் சொல்'-ஐ (Word of the Year) வெளியிட்டு வருகின்றன. அந்த ஆண்டில் மக்களிடம் அதிகம் புழங்கிய, பொது வெளியில் அதிக தாக்கம் செலுத்திய சொல், 'ஆண்டின் சொல்'லாகத் தேர்வு செய்யப்படுகிறது. 'ஆண்டின் சொல்' என்பது அந்த ஆண்டில், புதிதாக உருவாக்கப்பட்ட சொல்லாக இருக்க வேண்டும் என்றில்லை. அந்த ஆண்டின் போக்கில் மேலெழுந்த உரையாடலில் கவனம் பெற்றவை பெரும்பாலும் 'ஆண்டின் சொல்'லாகத் தேர்வாகின்றன.

அந்த வகையில், 'authenticity' என்கிற சொல்லை, 2023ஆம் 'ஆண்டின் சொல்' லாக மெரியம் வெப்ஸ்டர் அகராதி அறிவித்துள்ளது. 'நம்பத்தகுந்தது', 'உண்மையானது', 'போலி அல்ல' உள்ளிட்ட அர்த்தங்களையும், 'ஆளுமை, நோக்கம், பண்பு ஆகியவற்றுக்கு உண்மையாக இருக்கும் தன்மை'யையும் கொண்டிருக்கும் இச்சொல்லின் பயன்பாடு ஏஐ, அடையாளம் (identity), சமூக ஊடகம் உள்ளிட்ட தளங்களில் இந்த ஆண்டு சரமாரியாக உயர்ந்ததாக மெரியம் வெப்ஸ்டர் தெரிவித்துள்ளது.

**தகவல் முதலாளித்துவமும் தேர்தல்களும்:**

மனித உறவுகள் தொடங்கி, அன்றாட நுகர்வு வரையிலான எல்லா இயக்கத்துக்குமான ஆதார இழையாக 'நம்பகத் தன்மை' இருந்துவருகிறது. கற்பது, கேட்பது, கருதுவது ஆகிய செயல்பாடுகளை 'ஆழ்ந்த பொருளுள்ளதாக' மாற்றும் அடிப்படையையும் 'நம்பகத் தன்மை' கொண்டுள்ளது. இந்நிலையில், பெருங்கடலென அன்றாடம் நம்மை வந்துசேரும் தகவல்கள்- தரவுகளின் 'நம்பகத்தன்மை' இன்று கேள்விக்குரியதாக மாறியிருக்கிறது. எனில், இந்த ஆண்டின் சொல்லாக, 'authenticity' தேர்வாகியிருப்பது தற்செயலானதா? தொழில்துறை முதலாளித்துவம் தகவல் முதலாளித்துவமாகப் பரிணமித்துள்ள இக்கால கட்டத்தில், டிஜிட்டல் மயமாக்கல் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தகவல் சுனாமி நம்மை வாரிச் சுருட்டத் தொடங்கியுள்ளது. தகவல்தொடர்பின் புதிய சாத்தியங்கள், அரசியல் உள்பட சமூக வாழ்வின் பல துறைகளைச் சீர்குலைக்கத் தொடங்கியுள்ளன.

வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை என்கிற நிலைக்குப் பிறகு, ஓர் 'உலகளாவியத் தேர்தல்', 2024இல் நடைபெறவிருக்கிறது. மக்கள்தொகை அதிகமுள்ள அமெரிக்கா, வங்கதேசம், பிரேசில், இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ, பாகிஸ்தான், ரஷ்யா ஆகியவற்றுடன் 70க்கும் மேற்பட்ட நாடுகள், அடுத்த ஆண்டில் தேர்தலை எதிர்கொள்கின்றன. உலக மக்கள்தொகையில் பாதி, அதாவது 400 கோடிப் பேர் வாழும் இந்த நாடுகளில், சுமார் 200 கோடிப் பேர் வாக்களிக்க உள்ளனர். 21ஆம் நூற்றாண்டின் இயக்கத்தைத் தீர்மானிக்கப் போகும் இத்தேர்தல்கள், முதன்மையாகத் தொழில்நுட்பம் சார்ந்தவையாக இருக்கின்றன.

உள்நாட்டு மொத்த உற்பத்தி, பணவீக்கம், கோவிட்-19 தொடர்பான புள்ளிவிவரங்கள் எனப் பல்வேறு அம்சங்களில் தரவுகளைக் கையாள்வதற்காக அரசாங்கங்கள் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருகின்றன. இந்நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சாரங்களில் ஆழ்நிலைப் போலிகள் உள்ளிட்ட ஏஐ தொழில்நுட்பங்களை எதிர்மறையாகப் பயன்படுத்துவதற்கான அச்சுறுத்தலும் பெருமளவு நிலவுவதாக அஞ்சப்படுகிறது. வன்முறையின் பயங்கரமான கருவிகளை அரசும் போராளிக் குழுக் கள் - அமைப்புகளும் ஒரே நேரத்தில் கைகொள்ளக் கூடிய ஒரு நிலையை, இஸ்ரேல் - ஹமாஸ் போரில் பார்த்து வருகிறோம்.

**உலகத்தை நோக்கி வினவுதல்:**

நிற்பது, நடப்பது, பறப்பது - வானகம், இளவெயில், மரச்செறிவு ஆகியவை எல்லாம் கனவா, கானல்நீரா, காட்சிப் பிழையா, தோற்றமயக்கமா எனப் பாரதி வினவிச் சென்றார். சாட்ஜிபிடி போன்ற ஏஐ-யின் குழந்தைகள் சாத்தியப்படுத்தியிருக்கும் மாற்றங்கள், பாரதியின் கேள்விகளுக்கு இன்று புது அர்த்தம் கொடுத்திருக்கின்றன. உணவு, உடை என நுகர்வுப் பண்பாட்டில் நம்பகத்தன்மையை உறுதிசெய்யத் துடிக்கும் நாம், கருத்துகளின் நம்பகத்தன்மையைப் பொறுத்த வரை, 'லட்சுமண ரேகை'யைத் தாண்டிவிடக் கூடிய அபாயத்துடன் ஒற்றைக் காலை அந்தரத்தில் நிறுத்தியிருக்கிறோம். அந்தக் காலை முன்னெடுத்து வைக்கப்போகிறோமா, இல்லை சுதாரித்துப் பின்வாங்கப் போகிறோமா?

